# கமலம்



மலர்: 7

மலர்வு: தி. பி. மீனம் 2032
கி. பி. பங்குனி 2002

# தமிழால்
# தமிழுக்குள்
# தமிழனைத்
# தேடுவோம்

## தமிழ்த்தாய் வணக்கம்

உலகம் யாவிலும் உரைமொழி ஆக்கியும்
திலகமாய்க் குமரிநன் நாட்டை நின்றும் பூ
....உலகம்.....

எங்கும் மானிடம் ஏற்புறப் பண்பெனும்
அங்கம் ஆகினாய் அன்னையுன் தாள் தலைக்கே
.......உலகம் ......

பலமொழி உலகிடைப் பயின்று வளமுறப்
பலமுதற் பொருள்படு சொற்கள் நல்கியே
நலமுறப் பிறமொழி நின்றாய் இயற்கையின்
பலமுறப் பார்முதற் பிறந்த என்தமிழே -- உலகம் ...
குமரியில் முதலென்ப, பிறந்தவன் வாயிடைப்
புகுந்தனை முப்பிரி விலக்கணம் கொண்டே
உலகிடைப் பலவினம் தோன்றிய பின்னும்
அலகிலாப் புகழுறப் பரந்தனை தமிழே! ---உலகம் ..
மூண்டெழு புதுமையிற் பலமொழி பிறந்தும்
தோற்றம் அழிவெனப் பலமொழி சிதைய
மூத்தும் காத்தும் முருகினிற் சிறந்தும்
போற்றும் என்தமிழே புவிதனில் நிலைத்தாய் --உலகம்..
வள்ளுவன் கம்பன் வான்புகழ் இளங்கோ
தெள்ளிடு புலமைத் திருமகள் அவ்வை
சங்கச் சான்றோர் சாற்றிடப் பெருகிய
மங்காப் புகழே! என்தமிழே பணிந்தேன் --உலகம்

பாடல் ...... அழலாடி

# கமலம்

கனல் இதழெண்


| | |
|---|---|
| ஆசிரியம் | 1 |
| ஆரிடம்சொல்லி அழுவேன்! | 5 |
| கம்பரசம் | 11 |
| வெந்ததே சிந்தை | 17 |
| வாழும் தமிழும் பாழும் தமிழர்களும் | 18 |
| தங்கைக்கும் தம்பிக்கும் | 22 |
| சாதியும் சனாதனமும் | 31 |
| என்காதலி | 37 |


*வண்டினங்கள் மதுவாடிக் களியாட, மங்கையர்கள் குழல் சூடி மகிழாட, மலரும் மலரல்ல. தமிழின் பகை கண்டால், தமிழறியாத் தமிழனைக் கண்டால், கனன்று எரிக்கக் கனலில் மலரும் மலர் கமலம்.*

# ஆசிரியம்

கண்ணியம் மிக்க பிரித்தானிய முதலமைச்சர் ரொனி பிளேயர் அவர்களே! நீடு வாழ்க!

ஈழத் தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவதத்தில் இருந்து, எம்மக்களைக் காப்பாற்றும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தாங்கள் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்தி, இங்கிலாந்தில் தடை செய்வது என்று முடிவெடுத்தமையைக் கேள்வியுற்று அதிர்ச்யுற்றோம்:

இலங்கை என்ற தீவிலே சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள: ஐரோப்பியர் வருகையின் போது சிங்களம் தமிழீழம் என்று இாண்டு பிரதேசங்கள் இருந்தன. வடக்கும் கிழக்கும், வன்னிப் பெருநிலப் பரப்பும் தமிழர்களின் ஆட்சியின் கீழ் இருந்தன. இறுதியாகப் பிரித்தானியா மற்ற ஐரோப்பியர்களிடம் இருந்து இலங்கையைக் கைப்பற்றியபோதும், கண்டி இராச்சியம் வன்னி இராச்சியம் என இரண்டு சிங்கள தமிழ் இராச்சியங்கள் இருந்தன. பிரித்தானியா ஆள்புல வசதிக்காக சிங்கள தமிழ்த் தேசங்களை இணைத்தது. ஆனால், இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோது, நாடு முழுவதையும் சிங்களரின் கையில் ஒப்படைத்துப் பெருந்தவறைச் செய்தது. பிடித்த இரண்டு நாடுகளையும் தன் வசதிக்காக இணைத்த பிரித்தானியா, விட்டுச்செல்லும் போது, தமிழர்கள் பிரிந்து செல்ல வழி செய்திருக்கவேண்டும். பிரித்தானியா இலங்கையை ஆண்ட காலத்தில் தமிழர்களும் மாட்சிமை தங்கிய மகாராணியின் குடிமக்களாகத் தான் இருந்தார்கள். அத்தகையவர்களை மற்றோர் இனத்தின் ஆட்சியின் கீழ் வாழவிட்டது பிரித்தானியா. அன்றைய தமிழர்களும் புத்துலகச் சிந்தனையால் இணைந்துவாழ இணங்கினார்கள். ஆனால், மகாராணியின் மேலாண்மை இருந்த காலத்திலேயே, டொமிக்கன் தரத்தில் இருந்த காலத்திலேயே, தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்படுதல் ஆரம்பமாயிற்று. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் அரசகரும மொழியாக மும்மொழி களும் இருந்தன. ஆனால், சுதந்திரத்தின் பின் எட்டாவது ஆண்டில், எசு.டபிள்யூ.ஆர்.டி.பண்டாராநாயக்காவினால் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நாட்டின் தேசிய இனமான தமிழினம், தன் மொழியை அரசகருமங்களில் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டது. அப்போதாவது பிரித்தானியா தார்மீக அடிப்படையில், தமிழர்களுக்காகத் தலையிட்டிருக்கவேண்டும். 1972ம் ஆண்டு சிறிமாவோ

பண்டாரநாயக்கா இலங்கையைக் குடியரசாகப் பிரகடனப படுத்தியபோது, மும்மத மக்கள் வாழும் நாட:டை, தனிச்சிங்களப் பௌத்த நாடாக மாற்றினார் இப்படியாகப் படிப்படியாகத் தமிழனத்தின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டது: 1956ல் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துத் தமிழர் தலைவர்கள், காலிமுகத் திடலிலே உண்ணாநோன்புப் போராட்டம் நடாத்தியபோது, சிங்களம் அவர்களை அடித்து நொருக்கி இரத்தம் கொட்ட வைத்தது. அந்தச் காட்சியை ரசித்து, இந்த ருசியையும் தெரிந்து கொள்ளட்டுப் தமிழர்கள் என்று சொன்னார் பண்டாரநாயக்கா, இருபது ஆண்டுகள் வரை அறவழிப் போராட்டம் பயன் தராது போகவே, தமிழர் தலைவர் ஏசு.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தனித் தமிழ்நாட்டுச் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில்1977ல் இறங்கினார். அந்தச் கோரிக்கைக்குத் தமிழர்கள் ஒட்டு மொத்தமாக ஆதரவு தெரிவித்தார்கள். தமிழர்களின் 23 தேர்தற் தொகுதிகளிலும் தமிழர் கூட்டணி வென்றது. ஆகவே தமிழீழம் அனைத்துத் தமிழர்களதுப் வேணவாவாகும்.

1976ல் தமிழர்களின் கல்வியைப் பறிக்கும் செயலாகத் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. எந்தத் தேர்விலும் ஒரு சிங்கள மாணவனைவிட, தமிழ் மாணவர 20 புள்ளிகள் மேலதிகமாகப் பெற்றால் தான் சித்தி. உலகம் காணாத இந்தக் கொடுமையின் பின் தான், தமிழ்மாணவ சமுதாயம் ஆயுதத்தைத் தூக்கியது.

தமிழ்த் தேசிய இனம், மிகப் பழமையானதும், அனைத்திலும் ஒரு முழுமை பெற்ற இனமுமாகும். அந்த இனத்தைக் குடியேற்ற ஆதிக்க காலத்திலிருந்து, சீரழித்தது பிரித்தானியா தான். 18ம் 19ம் நூற்றாண்டுகளில் ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்கக் காடுகளில் கூலிகளாகக் கொண்டு சென்று குடியேற்றியது பிரித்தானியா. இன்றந்த மக்கள் அந்தந்த நாட்டினத்தின் அடிமைகளாகக் கிடந்து துன்புறுகிறார்கள். இரண்டாவது மகாயுத்தத்தின் பின் சுதந்திரம் வழங்கியபோது, இந்திய இலங்கைத் தமிழர்களைத் தன்னாட்சி அமைக்கவிடாமல் தடுத்து, பெரும்பான்,மை இனத்தின் அடக்கு முறைக்குள் வாழப் பணித்தது. அடக்கு முறையின் கொடுமயைத் தாங்கமடியாது, துடித்தெழுந்த ஒரு தேசிய இனத்தைட் பயங்கரவாதிகள் என்று பிரித்தானியா தடைசெய்வது, கொடுமையிலும் கொடுமை.

ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினையில் பிரித்தானியா வுக்குததான் பெரும் பங்கு இருக்கிறது. சேர்த்த பிரித்தானிய பிரியவிடாமற் தடுத்தத செயல், அந்த இனம் அழிவதற்குச்

காரணமாக இருப்பதைப் பார்த்துக் கொண்டும், மனித நாகரீகப் ஏற்றுக் கொள்ளமுடியாத, காட்டுமிராண்டித் தனமான பயங்கரவாதத்தை அரச படைகள் செய்வதைக் கண்டு கொண்டும், தாம் வாழ மனிதநேயத்துடன் தற்காப்புப் போர் புரியும் தமிழ் இளைஞர்களைப் பயங்கரவாதிகள் என்று, மனச்சாட்சியைச் கொன்று, தனது ஆதிக்க நலன்களுக்காக, பிரித்தானியா பிரகடனப் செய்வது மகாகொடுமை.

1929ல் டொனமூர் ஆணைக்குழு முன்னிலையிலும், 1932ல் சோல்பரி ஆணைக்குழு முன்னிலையிலும், தமிழர்கள் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளப் பாடுபட்டார்கள். ஆனால், ஆணைக்குழுக்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. அந்தநேரப் இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி.எசு.சேனநாயக்கா அவர்கள், தமிழர்கள் சிறுபான்மையினர் என்று அஞ்சத் தேவையில்லை என்று வாக்குறுதி அளித்தார். ஆனால், அவருடைய ஆட்சியிலேயே, பட்டிப்பளை என்ற தமிழர்களின் பெருவினைநிலப் பரப்பு, தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்டது.

மேன்மைக்குரிய ரொனி பிளேயர் அவர்களே! இந்திய இராணுவம் இலங்கை வந்திருந்தபோது, திலீபன் என்றொரு புலிப்படை விரனும், பூபதி என்ற தமிழன்னையும் இந்திய இலங்கை அரசுகளை நீதி கேட்டு, உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த மாபெரும் அறச்செயலைத் தங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

சந்திரிகா அம்மையார் சமாதானத்திற்கான போர் என்று உலகை ஏமாற்றிக் கொண்டு, போரைத் தொடர்ந்து தமிழினத்தை அழிக்கும் செயலையே செய்கிறார். புலிகள் ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தம் செய்தும், பேச்சு வார்த்தைக்குத் தயாராகாமல் படையைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கிறார். இதை நீங்களும் நன்றாக அறிவீர்கள். வாழத்துடிக்கின்ற மக்களை அடக்கமுடியாது. வேண்டுமானால் முற்றாக அழித்துவிடலாம். கைக்கூலிகளின் துணையுடன் இதைத்தான் சந்திரிகா செய்து வருகின்றார். ஒல்லாந்தில் உள்ள கேக் நகரத்தப் போர்க் குற்றங்களுக்கான நீதிமன்றத்தில: போர்க்குற்றவாளியாக நிறுத்தப்பட வேண்டிய, அரச பயங்கரவாதத்தின் பொறுப்பாளரான சந்திரிகாவிற்காக, மனச் சாட்சியைக் கொல்லாதீர்கள். நீதியைக் காப்பாற்றுங்கள். இன்றேல் தமிழ்ப்புலவன் வள்ளுவன் " அரசியல் பிழைத்தாரை அறங்கொல்லும்" என்று சொன்னாற்போல், இயற்கையினுடையவும், நீதியினுடையவும், இறைவனுடையவும் சீற்றம் பிரித்தானியாவைச் சூழலாம்.

ஆதலால், கண்ணியம் மிக்க ரொனி பிளேயர் அவர்களே!

புலிகளைத் தடை செய்கின்ற காரியத்தைப் புறந்தள்ளி வைத்துவிட்டு, புலிகளுடன் பேசுமாறு இலங்கை அரசை நிர்ப்பந்தியுங்கள்.. அரசு ஒப்புக் கொள்ளாவிட்டால், புலிகள் போராடித் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளட்டும். விட்டவிடுங்கள்.

(ஆசிரியம் ஆங்கிலத்தில் மொழிமாற்றுச் செய்யப்பட்டு பிரத்தானியட் பிரதமர் அவர்கட்கு அனுப்பப்பட்டுள்ளது)

# வம்புக்கேன் வாறியள் வாஜ்பாய் அண்ணா!

கடந்தவாரம் வாஜ்பாய் அண்ணா வாயைத் திறந்துள்ளார் வரலாறு சொல்வதற்கு. “நாய்க்கேன் போர்த்தேங்காய்“ என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதுமாதிரி அவருடைய தம்பி, நடுவணரசின் கல்வியமைச்சர் பழையபடி நேருவின்ரை விளையாட்டொன்று தொடங்கியுள்ளார. மாநிலங்களிடம் இருந்த கல்விப்பொறுப்பை நடுவணுக்கு மாற்றினார். மாற்றிப்போட்டு, (இந்திக்குட் பதிலாக) சமக்கிருதக் கல்வியை இந்தியா முழுக்கச் கொண்டுவரப் போறாராம். இந்தி என்றால் தானே தமிழர்கள் துள்ளுவார்கள். கேள்விப்பட்ட யாரோ, சமக்கிருதம் செத்தமொழி என்றாராம். அதுக்குத் தான் வாஜ்பாய் அண்ணா சமக்கிருதம் செத்தமொழியல்ல, தமிழைத் தவிர, இந்திய மொழிகள் எல்லாப் சமக்கிருதத்தில் இருந்து தான் தோன்றியது என்று திருவாய் மலர்ந்துள்ளார்: அவர் பாவம், சமக்கிருதப் கூடத் தமிழிலிருந்துதான் சமைத்தது என்பது தெரியாதாக்கும். அது தெரியாவிட்டாலும் பரவாயில்லை. உலகம் முழுவதும் கூட்டுநாடுகளாய் இருந்த நாடுகள் அடிபட்டுப் பிரிந்து கொண்டிருப்பது தெரியாமல் வாயைச் திறந்துள்ளாரே! அது தான் இந்தப் பொர்த்தேங்காய் காவுகிற வேலை.

# ஆரிடம் சொல்லி அழுவேன்

கடந்த சித்திரைத் திங்கள் 2ம் நாள், சுவிறசலாந்தின், ஜெனீவா நகரத்தில் உள்ள, ஐ.நாவின் மனித உரிமைகளுககான் மனித உரிமைகள் மன்றத்தை நோக்கி, சிறீலங்கா அரசினால் தமிழர்கள் மீது நடாத்தப்படும் காட்டுமிராண்டித் தனத்தை எடுத்துக்கூறும் முகமாக, தமிழர்களின் பேரணியொன்று நடாத்தப்பட்டது. ,பேரணியின் இறுதியில் இரண்டு தமிழர்கள உரையாற்றினார்கள். ஒருவர் ஈழத்தமிழர்,. ஆனால், பார்ப்பார். பார்ப்பார் என்றால் எனது பார்வையில் தமிழ்விரோதி தான். சில சமயம் அவர் அறியாமலும் இருக்கக்கூடும். தமிழன் தாழ்ந்துபோனதற்கும், இன்றும் அடிமைத்தளையில் இருந்து விடுபடமுடியாமற் தவிப்பதற்குப் காரணமான, வேதமதக் கொள்கைகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, மந்திரமொழி என்று சொல்லிக் கொண்டு, சமக்கிருதத்தால் கடவுள் தரகராய் நின்று காசு சம்பாதிக்கிறவர். மற்றவர் அஞ:சாநெஞ்சன் பெயரே வீரபாண்டியன். பொதுவாகவே அன்று இப்படிப் பேசினேன் என்பதை மறந்து நாளை வேறு என்னவோ பேசுகின்ற, வீரர் கூட்டப் வாழும் தமிழகத்தைச் சேர்ந்தவர். பேசவந்தவர்களும் சரி, இந்தப் பேச்சுக்களைக் காசு கொடுத்து ஒழுங்கு பண்ணியவர்களும் சரி, பெரிசாகப் புளுகியடிக்க வந்தார்களே தவிர, கைதட்டல்களுக்காகப: பேச வந்தர்களே கவிர, நான் என்னபேசவேண்டும் என்று எண்ணிப்பாராமல், தமிழ் விரோதமாகப் பேசினார்கள். பேச்சை ஒழுங்குபடுத்தியவர்களைப் பொறுத்தவரையில், பாவப் அவர்களுக்குத் தெரிந்த வரையில், கொஞ்சமும் அஞ்சாமல் வெட்டித் தள்ளினார்கள் என்பது தான். வரப்புயரத்திற்குத் தானே வெள்ளம்.

அன்பர்களே! அவர்கள் பேசியது தமிழ் விரோதப் பேச்சு என்பதை அறிவீர்களா? தமிழுலகம் தமிழன் தாழ்ந்ததற்கு யார் காரணம்?, இன்றும் தமிழன் விடுதலை பெற்றுவிடாமற் கீழறுப்புச் செய்வது யார்? அந்தக் கீழறுப்பை தமிழன் ஏற்றுக் கொள்ளுமாறு ஏற்படுத்தப்பட்டுள்ள பாடங்களும் நூல்களும் என்ன? என்று மானமுள்ள தமிழர்களால் முரசறையப்பட்டு, தமிழர் குமுகாயம், உலகம் முழுவதிலும் எல்லா நிலைகளிலும் போர்க்கொடி தூக்கி நிற்கிறது. அதுவும் தெரியாதா? தமிழன் என்ன பேசவேண்டும்?
எப்படிப் பேசினால் தமிழ் உள்ளங்கள் தமிழுணர்வோடு ஒன்றுபடும் என்றும் தெரியாதா? தெரியாவிட்டால் தெரிந்தவர்களைக் கொண்டு பேசச்செய்யுங்கள். உள்ளூரின் அன்னங்களைவிட வெளியூர்ச் காகங்கள் உயர்வுதான்.-

குருக்கள் மிக உள்ளுணர்வோடு, இதயந்தொட்ட நாட்டுப் பற்றுடன் தான் பேசினார். அது அவரது தொனியில் தெறித்தது. வேண்டிய இடங்களில் வேண்டியவர்கள் புரிந்து கொள்ளும்படி வேறு மொழிகளிலும் பேசினார்.. ஆனால் அவர் பிரபாகரனுக்கு உவமானப் கூறவந்த இடத்தில் செய்த வேலை. தான் ஒரு தமிழ்விரோதப் பார்ப்பார என்பதைக் காட்டிவிட்டார்.

மகாபாரதத்தில் கிருட்டினனாக் அவதாரம் எடுத்த பகவான், இராமயண்த்திலே இராமனாக அவதரித்தார், இப்போது, பிரபாகரனாக அவதரித்தார் என்று பேசி, பிரபாகரன் மீது தமக்குள்ள மிதமிஞ்சிய பக்தியை வெளிக்காட்டி, மக்களை. இந்துமதக் கருத்துக்கு இழுத்துச் செல்கிறார்.

பேசினவரையும் கேட்கிறேன், செவிமடுத்தவர்களையும் கேட்கின்றேன். பகவான் என்பது யார்? வடவரின் வைணவக் கடவுளான விட்ணு. தமிழரின் கடவுளல்ல. சிவன் தான் தமிழரின் கடவுள். இதை மறைத்து இரண்டும் ஒன்றுதான் என்பது போல் புராணத்தையும் எழுதி வைத்துள்ளார்கள். "அரிகரனுக்கு ஓர் மகனே ஐயனார் கோவே" என்று. அரி என்றால் விட்ணு. அரன் என்றால் சிவன். தேவையின் அடிப்படையில் விட்ணு பெண்ணாக, சிவன் ஆணாகி ஐயனார் என்கிற பிள்ளையைப் பெற்றெடுத்தார்கள் என்று

இந்தப் பகவான் கிருட்டின அவதாரத்தில் என்ன பண்ணினார். பிருந்தாவனத்தில் கோபியர்களுடன் கும்மாளப் போடுகின்ற காதல் மன்னன். பெண்கள் ஆடைகளைச் களைந்துவிட்டுத் தடாகத்திலே குளிக்கும்போது, பட்டப்பகலில், அவர்களது ஆடைகளை எடுத்துக் கொண்டு மரத்தில் ஏறியிருந்துகொண்டு, கையெடுத்தக் கும்பிட்டால் தான் தருவேன் என்று கோபியர்க்குக் கட்டளையிட்டவன். சும்மாவே குளத்தில் குளிக்க உடம்பெல்லாந் தெரியும். போதாதற்கு மரத்தில் மேலேறியிருந்தால் எல்லாமே வடிவாகத் தெரியும், இந்தலட்சணத்தில் கையைத் தூக்கிக் கும்பிட்டால் மார்புகள் நீருக்க மேலே தெரியும். அதற்குப் பிளான் போட்டவன் தான் பகவான்.பாரதப் பொரிலே செஞ்சோற்றுக் கடனுக்காக நான் எதையும் செய்வேன் என்கிறான் கர்ணன். கர்ணனை வெல்ல யாராலும முடியாது. முதலே குந்தியை அனுப்,பித் தாய் என்று அறிமுகப்படுத்தி அவனுடைய சக்தி வாய்ந்த அம்பை ஒரு தடவைக்கு மேல் அருச்சுனன் மீது எய்யக் கூடாது என்று வரம் வாங்குவித்தவன் அது போதாது என்று ஐயர் வேடங்கொண்டு, அவனுடைய கவச குண்டயங்களை பரிசாகக் கேட்டவன். அப்பவே பகவானுக்குத் தெரியம் ஒருவனை ஏமாற்றுவது என்றால் ஐய

வேடம் போடவேண்டும் என்று. அதைவிட முக்கியமான காணரம் ஒன்று இருந்தது. கர்ணனும் துரியோதனன் மனைவியும் சதுரங்கப் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஏதோ சந்தர்ப்பவசமாக கர்ணன் அவளுடைய சேலையைப் பிடித்து இழுத்துவிட்டான். முகதலைப்பு அறுந்து, அதிலிருந்த மணிகள் சிதிறிவிட்டன. அந்த நேரம் துரியோதனன் வந்துவிட்டான். அவன் சிரித்துக் கொண்டே மணிகளைப் பொறுக்கிக் கொடுத்தான் அவனுடைய மனதிலே கரவு என்கிற நோய் தோன்றவில்லை அத்தகைய உத்தமன்-. உத்தமர்கள் அழிந்தால் தான் பகவான் போன்றவர்களுக்கு ஆதாயம்.

பாண்டவரகள் தனித்தனிய மனைவிகளைச் கொண்டிருந்தாலும் ஐவருக்குமாகப் பொதுப்பெண்டில் வைத்திருந்தவர்கள். திரௌபதி என்று பெயர். தமிழர் பண்பாட்டில் அண்ணன் மனைவி அன்னை மாதிரி. கணவனின் பின்னோரைத் தாய்போல் ஊட்டி வளர்ப்பாள் அண்ணி. வடவரோ அண்ணன் தம்பி ஐவரும் ஆள்மாறி ஆள ஒருத்தியை கட்டிலுக்குக் கொண்டு போனவர்கள். அது மட்டுமல்ல, அவளுக்குப் பிள்ளை பிறக்காமலும் பார்த்துக் கொண்டார்கள். பொதுப்பெண்டிலுக்குப் பிள்ளை பிறந்தால் இடைஞ்சல்தானே? அப்படிப்பட்டவளை பகவான் பாரதத்திலே கடவுள் நிலைக்கு உயர்த்துகிறார். அதைவிட இன்னொரு விடயம் என்னென்றால, இவர்களுடைய தாய் குந்தி, கன்னியாய் இருக்கும் போது கள்ளப் பிள்ளைப் பெற்று ஆற்றிலே விடடவள் அவன் தான் கர்ணன். ஆனால், வடவன் சூரியபகவானுடைய அருளினால் கர்ணனைக் கருத்தரித்தாள் என்று புராணம் எழுதி வைத்துள்ளார்கள். வடவரின் வரலாற்றில் கடவுளும் பொம்பிளைக்கு அலையிற சாமான்களாய்த்தான் கிடக்கு. இத்தகையவர்கள் தானே பகவானுடைய காதல் லீலைகளுக்கு ஏற்றவர்கள். ஆகையினால், அவர்களைத்தானே காப்பாற்றவேண்டும்: இந்தப் பகவான் கிதையிலே சொல்கிறார "துஷ்ட நிஹ்கிரக சிஸ்ட பரிபாலன" என்று. தீயவர்களை அழித்து நல்லவர்களைப் பாதுகாப்பேன் என்பது பொருள். நல:ல கொள்கை தான். ஆனால் பகவானுடைய பார்வையில் நல்லவர்கள் யார் என்றால் பொம்பிளை பொறுக்கியளும், கள்ளப்பிள்ளை பெறுகிறவளையும் தான்.

இந்தப் பகவான் இராமாவதாரத்திலே என்னவெல்லாம் செய்தார. வனவாசம் போன இடத்தில் பெண்டில் சிதையைத் தவறவிட்டுவிட்டார். கொண்டுபோனவன். கொண்டுபோய் மிகவும் கவனமாகப் பெண்களின் காவலில் கண்ணியமாகச் சிறை வைத்திருந்தான். அவன் தமிழன் அல்லவா? பண்பட்டவன். சீதையை

அவள் மீட்கிறபோது, இராமன் சொல்கிறான் பிற ஆடவனுடன் நீண்ட காலம் இருந்த பெண்ணை எப்படித் தான் ஏற்றுக்கொள்வது என்று. என்ன விரும்பியா போனவள். இல்லாமலும், வடவனுக்குத் தங்களைப் போல், கொண்டு. போனவன் அவளைச் சுவை பார்த்திருப்பான், சும்மாய் விட்டிருக்கமாட்டான் என்கிற ஐயம்.. கடைசியில் அவளைத் தீக்குளிக்கவைத்துத் தான் கூட்டிக்கொண்டு போனான். பிறகும் அவனுக்கு மனம் அமைதிப்படாமல் சீதையைச் காட்டில் விட்டவன்.

இராமனும் இலக்குமனனும் காட்டில் இருந்த காலத்தில், தமிழகத்திற்கு இராவணனுடைய அரசப் பிரதிநிதியாக இருந்து ஆட்சி செய்த, அவனுடைய விதவைத் தங்கை வீரநகை (சூர்ப்புநகை) யைக் கண்டு, அவளைக் கெடுக்கப் பார்த்து, அவள் இடங்கொடாததால் அவளுடைய மூக்கை அறுத்தவன் இராமன். ஆனால், அவர்கள் எழதின கதை வேறுமாதிரி. சூர்ப்பநகை இராமனைக் கெடுக்கப்பார்த்ததால் மூக்கரிந்தானாம். பெரும் வேடிக்கை ஒரு ஆணை, அதுவும் அவதாரத்தை ஒரு பெண் கெடுக்கட் பார்த்தாளாம்.

கௌதம முனிவருடைய மனைவி அகலிகை. முனிவர் வைகறையில் தவத்திற்குப் போன பிறகு, அவள்மீது ஆசை கொண்டிருந்த இந்திரன், மெல்ல விட்டுக்குள் நுழைந்து அகலிகையோடு உடலுறவு கொண்டான். அப்போது இந்திரன் அவளைப் புணர்ந்த விதம், வித்தியாசமாய் இருந்தது. அகலிகைக்குத் தன்னைப் புணர்வது தன் கணவன் அல்ல என்று தெரிந்ததாம், இந்திரனிடம் கிடைத்த இன்பத்தில் பேசாமற் கிடந்தாள். வேலை முடிவதற்கிடையில் ஏனோ கௌதமர் திரும்பிவந்துவிட்டார். இருவரும் பிடிபட்டுக் கொண்டார்கள். முனிவர் அகலிகையைக கல்லாகச் சபித்தார். இராமன் இளைஞனாக இருந்த காலத்தில் விசுவாமித்திரருடன், தாடகையை வதம் செய்யப் போய்ச் கொண்டிருந்த வேளையில், இந்தக் கல்லை மிதித்ததுப் சாபவிமோசனம் அடைந்து அகலிகை எழுந்தாள். இராமன் அவளைப் பத்தினித் தெய்வமே தாயே என்று போற்றுகின்றான். ஊரிலை இப்படிப் பட்ட பத்தினிகள் இருந்தால் ஆம்பிளையளுக்கு எவ்வளவு வாசி.

வாலியும் சுக்கிரீவனும் அண்ணன் தம்பி. அவர்களுக்குள் சண்டை வாலியோ மாவீரன். இராவணனின் நண்பன். இராவணனைச் கொல்லச் சதி செய்யச் சுக்கிரீவன் ஒப்புக் கொண்டதால், இராமன் ஒளித்திருந்து அம்பெய்து சுக்கிரீவனுடன் போரிட்டுக்கொண்டிருந்த வாலியைக் கொன்றான்.

விசுவாமித்திரருடன் ஒரு ஆற்றங்கரை ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தான் இராமன். அப்போது ஓரிடத்தில் சம்புகன் என்னும் தமிழன் தலைகீழாக நின்று தவம் செய்து கொண்டிருந்தான். இதைக்கண்ட இராமன் சூத்திரன் தவம் செய்யக்கூடாது என்று, ஆயுதங்களின்றி, அன்னஆகாரமின்றி இருந்த சம்புகனின் தலையை வெட்டி எறிந்தான்.

வனவாசம் முடிந்து நாட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறான் இராமன். 14 வருடங்கள் பரதன் நாட்டை ஆண்டு வருகிறான். தன்பெயரால் அண்ணன் காட்டுக்குட் போகும்படியாயிற்,றே என்ற வேதனையுடன், அண்ணா எப்போது வருவார் என்று காத்தக்கிடக்கிறான். ஆனால் இந்த இராமனோ, அனுமானைக் கூப்பிட்டு, இவ்வளவு நாளும் அரசசுகம் கண்ட பரதன், நாட்டைத் திருப்பித் தருவான் என்று நான் நம்பவில்லை. நீ போய் சாடை பார். தரமறுப்பான் போல் தெரிந்தால் அவனைச் கொன்றுவிடு என்று அனுப்புகிறான். அப்படிப்பட்ட கெட்டவன் இராமன். இன்னும் எவ்வளவோ இருக்கு.

இந்தக் கேடுகெட்ட அவதாரங்களுடன் கொண்டு போய் பிரபாகரனை ஒப்பிடுகிறீர்களே, மடயர்களே! காலத்தின் தேவையில், தமிழன் பண்பாட்டின்- போர்த்திறனின் மொத்த உருவமாய் தமிழ் படைத்த மறத்தமிழனடா அவன். அவன் மட்டுமல்ல அவனின் பின்னால் நிற்பவர்களே, தமிழர் பண்பாட்டின் மொத்த உருவங்கள். அவனைக் கொண்டுபோய் தமிழினத்தை அழிப்பதற்கு என்று உருவாக்கப்பட்ட பொறுக்கிகளோடு ஒப்பீடு செய்கிறீர்களே! இனிமேலாவது எண்ணித் தெளிந்து பேசுங்கள். இன்றேல் பேசாதீர்கள்.

இப்படிப்பட்ட புராணக் கதாநாயகர்களான கேடு கெட்டதுகளுடன் பிரபாகரனை ஒப்பிட்டுப் பேசிவிட்டுப் போறாரே ஐயர். ஐயரே! தெரிந்தோ தெரியாமலோ நீர் அதற்குள் ஊறிப்போனவர். ஆனால், இப்பெல்லாம் தமிழகம் தணலாய் கொதிக்குதே! கன்னடரும் தெலுங்கரும் வடவரும் பிராமணன் என்று சொல்லிக்கொண்டு, தமிழர்களைப் புராணங்களால் ஏமாற்றிச் கொண்டு வாழ்வதுபற்றி. இது உமது செவிகளுக்கு எட்டவில்லையா? அல்லது இன்னும் உமக்கு சமக்கிருத வருமானம் வருகிறதா? எல்லாம் எங்கடையளுக்கு மண்டைக்குள் இல்லாததால் இப்படியெல்லாம் நடக்குது.

மறவீரன் என்ன சும்மாவா? அவர் எடுத்துக்காட்டுக்கு எடுத்ததும் பாரதம் தான். இவையளுக்கு பழந்தமிழ் இலக்கியங்கள், நீதிநூல்கள், சங்கத்தமிழ் ஒன்றும் கண்ணிற் படுவதில்லையா?

ஆரியத்தின் எல்லாக் கிழறுப்புகளும் தெரிந்து கொண்டுப் அவங்களின் கேவலக் கதைகளைத் தானே இப்படியான பேச்சுகளின் மூலம் மக்களின் மனதில் நிலைநிறுத்துகிறார்கள். மரந்தெரியுதா? கிளைதெரியுதா? இலை தெரியுதா கிளிதெரியுதா? கீழை மேலை எல்லாம் தெரியுதா? என்றெல்லாம் கேட்டு, இல்லை ஒன்றுமே தெரியவில்லை கிளியின் கண் தான் தெரிந்ததாம், அருச்சுனன் என்கிற வந்தேறிக்கு. அவனுக்கு என்ன தெரிந்தால் தமிழனுக்கு என்ன? அதைமாதிரித்தானே தமிழகத்தானுக்கக் கதிரை தெரியுது என்கிறார். ஐயா பாண்டியரே! பாரதம் என்கிற ஆபாசச் களஞ்சியத்தைப் புறந்தள்ளத் தானே கிடந்து படாதபாடு படுகின்றோம். நீங்கள் என்னடா என்றால் அதை நிறுத்திப்பிடிக்க அல்லவா, மேடைகளைப் பயன்படுத்துகிறீர்கள். எண்ணிப் பேசுங்கள். கோப்பெருஞ்செழியனுக்கு அரசவை தெரியவில்லை. பக்கத்தில் இருந்த அரசியைத் தெரியவில்லை, கண்ணகியைத் தெரியவில்லை. அவனுக்குத் தெரிந்தது, நிலத்திலே கிடந்த மாணிக்கப்பரல் தான். அதனால் தான் நானே கள்வன் என்று உடனேயே உயிர்துறந்தான்: இந்த உயர்ந்த பண்பாட்டின், பேரறத் தற்கொடையை உங்களுக்குத் தெரியவில்லையா? பிடிபடும் நிலைக்குள்ளான புலிவீரனுக்குச் சயனைட் குப்பிதானே தெரிந்தது. தன் உயிர் தெரியவில்லையே, இதெல்லாம் உங்களுக்குத் தெரியவில்லையே! அதுதான் என்வேதனை.

எது தெரியவேண்டுமோ தமிழனுக்கு, அது தெரியாது, எது தெரியக்கூடாதோ அதெல்லாம் தெரியும். இதனால் தானே தமிழனுக்கு இந்தக் கதி!

*அன்புத் தமிழ் நெஞ்சங்களே!*
*உங்களது தமிழுணர்விற்கு விருந்து படைக்க*
*திருமண, பிறந்தநாள் வாழ்த்துக்கள்*
*அரங்கேற்ற வாழ்த்துக்கள்*
*போற்றுதல்கள், இறைஞ்சல்கள்*
*கல்வெட்டுக்கள்*
*எதுவானாலும் இனிய நறுந்தமிழில் ஆக்கித் தர,*
*காத்திருக்கிறது*
*கமலம்*

அண்ணாவழி

# கம்பரசம்

ஆரியச் சதியின் மூலக்கருவியான இராமாயணம் எப்படித் தமிழனை ஏமாற்றுகிறது. அந்த ஆபாசக் கதையை, சொர்க்கப் தேடித் தமிழன் பாராயணம் பண்ணுகிற வேதனையை, அந்த அசிங்கத்தை நீங்களும் கண்டறிய அண்ணாவழி கம்பரசப் தரப்படுகிறது.

கம்பராமாயணம் நல்ல தமிழ்க் காவியம் தான், உலகத்து அழகெல்லாம் அள்ளித்தருகின்ற காவியம் தான். ஆனால், கற்றுத் தேறி முதிர்ந்தவர்கள் தான் அந்தச் சுவையை நுகரலாம் ஏனெனில், பெண்ணுடலின் மேடு பள்ளங்கள் எல்லாம் விடாமல், கடல் எது? மலை எது? என்று கடைந்தெடுத்துத் தந்திருக்கிறான் கம்பன். இன்றைய நாடுகளின் மேற்குலக நீலப் படங்களை விடப் பாலியல் காட்சிகளை, நுணுக்கங்களை தெட்டத் ளிவாகக் காட்டுவது கம்பராமாயணம். ஆனபடியால், அதைத் தமிழ் இலக்கியமாக, பாடநுலாக, பக்தி மார்க்க நுலாகத் தமிழன் கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடாது, என்று தான் கூறுகின்றேன். ஆரியதாசன் கம்பன் அப்படி ஆபாசத்தைக் கொட்டி, அதைப் பாடியதே அந்தச் சுவைக்கள்ளால் தமிழனை ஆரியத்துள் விழ வைப்பதற்கே.

டோஸ் 9

கலை மணம் கமழவேண்டுமானால் கம்பனின் காவியப் கட்டாயம் வேண்டும் என்றாராம் ஒரு காலரசிகர். கலா ரசிகரல்லவா! மென்மையானவராக இருப்பார். ஆனபடியால், அவரைச் காடுமேடெல்லாம் இழுத்தலைத்துச் சிரமப்படுத்தக் கூடாது என்று, சீதளக்(குளிர்ந்த) காற்றிலே, வண்ணமலர்களின் எழிற் காட்சியினூடே, கமபராமாயணத்தைப் பற்றிப் பேச அழைத்துச் சென்றாராம் அண்ணா.

அந்தத் தடாகங்களிலே (தாமரைக்குளம்) இரண்டு நிடத நாட்டிலுள்ளவை. ஒன்று மிதிலைக்கும் அயோத்திக்குமிடையில் இடையில், மற்றது கிராமப் புறமொன்றில் உள்ளது.

அதிவீரராமபாண்டியன் ஒரு மன்னன். மிகச் சிறந்த பாவலன். நளவெண்பாவை நைடதம் என்ற நூலாகப் பாடினான். அந்த நைடதம் கொஞ்சம் அதிகமாகவே காமச் சுவையுடையது. காரணம், அவன் மன்னன் மங்கையர் இன்பத்தை மட்டின்றிப் பெறக்கூடிய வாய்ப்புள்ளவன். மங்கையரின் மதுரமொழிகளையும்,, (இனிய) அதரக் (இதழ்) கனிரசங்களையும் அதிகமாவே சுவைத்திருப்பான். அதனால் மற்றக் கவிகளைவிட அதிவீரராமபாண்டியன், பட்டறிவு

காரணமாகக் காமச்சுவையை அதிகமாகப் பாடுவது இயல்பு தானே. எத்தனையோ எழிலிடைத் தடவிட (அகன்ற இடம்) மாதர்கள் காத்துக் கிடந்தும், பொன்மேனியும், முத்துப்பற்களும், பவள இதழ்களும், தாமரை முகமும் கொண்ட சரசியைத் தேடித்தேடி, அப்படி ஒருத்தி தன் இனத்தினுள் கிடைக்காத காரணத்தால், வேற்றினதுதில் பெண் எடுத்தான் என்று, அவனைப் பற்றி ஒரு கதை இருக்கிறது. அதாவது அரிவையர் ஆராய்ச்சியில் இவன் கைதேர்ந்தவன் என்று தெரிகிறது.

இவன நைடதத்தைப் பாட எழுந்தான். நைடதப் காமச்சுவையைக் காண்டம் காண்டமாகப் பாடக்கூடிய கதை. அவனும் காமக் கலையைக் கரைகண்டவன். இராமாயணத்தைட் போல், படித்தாலோ, படிக்கப் பக்கம் நின்று கேட்டாலோ, இறைவனின் பரமபதத்தைத் தருகின்ற புண்ணிய கதையல்ல அது. ஒரு மன்னனின் கதை. அதை எப்படியும் எழுதலாம் இன்பப் பொங்க. ஆனால், கம்பரைப்போல் கடவுட் கதையைப் பாடி, இடையிடையே படுக்கையறைக்கு அடியார்களைக் கூட்டிச் சென்று, இடையைப் பார்! தொடையைப் பார்! இடுக்கைப் பார்! ஆழ்ந்து பார்! கூர்ந்து பார்! என்று காட்டிவிட்டு எம்பெருமான் திருவடிகளே சரணப் என்று, இறைஞ்சுபவரல்ல நைடத ஆசிரியர். அவர் எப்படியுப் பாடலாம். ஆனால், அவர் காமச் சுவையைக் கூட, ஒரு வரம்பிற்குள் நின்று தான் கூறுகின்றார். அதனால், கம்பதாசர்கள் கூறுவது போல் கவிச் சுவை கெட்டுவிடவில்லை.

காதல், தாபம், ஊடல், கூடல், மதியைப் பழித்தல், தென்றலை இகழ்தல், மன்மதனைக் கடிதல் என்று, காமச் சுவைக்குரிய இலக்கணங்கள் ஒன்றுவிடாமல் பாடித்தான் உள்ளார். ஆனால, எந்த இடத்திலும் அவர் வரம்பு கடக்கவில்லை. ஆனால் கம்பனின் கடவுட் கதையில் எந்த எல்லைக் கல்லும் இல்லை.

அதிவீரராமபாண்டியன் மாதர்களை வர்ணிக்கிறபோது அந்தந்த நிலைக்கேற்ப வாணிக்கிறார். தடாகத்திலே தையலர் நீராடுகின்றனர். அப்போது தாமரைக்கும் அவர்களின் முகத்திற்குப் வேறுபாடு தெரியாமல் வண்டுகள் மயங்கும். கோமள வல்லிகளின் கண்களுக்கும் குவளைக்கும் வித்தியாசம் தெரியாமல், வண்டுகள் மருளும். அதாவது வண்டுகள் பெண்டுகளைக் கண்ட அளவோடு அதிவீரராமபாண்டியன் நிறுத்திக் கொள்கிறார்.

கம்பன் கடவுள் கதையில் பாடுவதைப் பாருங்கள். ஓடத்திலேறிச் செல்கையில், மாதர்மேல் நீர் தெறிப்பதால், மறைவிடம் தெரிந்த சம்பவத்தைக் காட்டினாரல்லவா? அவ்விடப் தெரிந்ததும், ஓடத்திலிருந்த ஆடவர் களைப்பு நீங்கிச்

களிப்படைந்தார்கள் என்று பாடினாரல்லவா? இப்படியொரு பண்பு விளக்கத்தை எந்தக் கவி பாடுவான். கம்பனுக்கு பண்பு விளக்கத்தைவிட மங்கையரின் அங்க விளக்கத்திலேயே ஆர்வப் அதிகம் இருந்தது. இந்தக் காம விளக்கத்தினால, ஆண்டவன் அவதரித்த அயோத்தி மக்களின் பண்பு கீழானதாகும் என்பதைச் கூடஎண்ணிப் பாராமல், காமக் கிறுக்கத்தால் அல்லவா இப்படிப் பாடினான் கம்பன். நனைந்த தங்களை அயோத்தி ஆடவர் அப்படிட் பார்ப்பதை, அயோத்திப் பெண்கள் கண்டு வெகுண்டனர், அருவருப்டைந்தனர், என்றாவது பாடி, அந்தப் பெண்களின் மானத்தையாவது காப்பாற்றினானா? கம்பன். கம்பனுக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை விட, அரிய சந்தர்ப்பம் கிடைத்தது அதிவீரராடமபாண்டியனுக்கு.

பொய்கையிலே (தாமரைக்குளம்) தையலர்கள் புனலாடுகிறார்கள். அந்நேரம் நளன் அவ்வழியாற் செல்கின்றான். இந்த வாய்ப்புக் கிடைத்தால் இராமன் வந்து தடுத்தாலும், கம்பன் அடங்கான். ஆனால், நைடத ஆசிரியர் பண்பிற்குக் கட்டுப்பட்டார். பண்பிற்குப் பழுது ஏற்படக் கூடாது, குமரிகள் குளிக்குப் வேளையில் குளத்தடியில் நளன் வரலாமா? ஆடவனொருவன் தாப் நீராடுவதைப் பார்க்கிறான் என்றால், அவர்கள் மனம் புண்ணாகாதா? பண்புக் கேடல்லவா இது. பாவலன் யோசிக்கிறான். நான் படைக்குப் பாத்திரங்கள், பண்புக் கேடர்களாக இருக்கக் கூடாது. தாடகத்திலே நீராடும்போது மங்கையரின் மறைக்கப்பட வேண்டிய அங்கங்கள் தெரிவது இயல்பு. உடனே நீராடும் நங்கையரைக் கணட போது நளன் என்ன நிலையில் இருந்தான் என்று ஒரு கதை கூறுகின்றார். நளன் நங்கையரைக் கண்டானே தவிர, நங்கையர் நளனைச் காணவில்லை. காரணம் நீராடிக் களிக்கும் கவனத்தில் அவனைச் காணவில்லை, என்றாரா இல்லை. நளன் யார் கண்ணுக்குப் தெரியாமல், உருவை மறைத்தக் கொண்டு செல்கின்றான்.. அரசிளங்குமாரியான தமயந்திக்குச் சுயம்வரம. அவள்மீது காதல் கொண்ட நளனும், சயம்வரத்திற்கு வருகின்றான். தேவர்களும் வருகின்றாகள். இந்நிலையில், தமயந்தி தன்னை மணக்கவேண்டுப் என்று, இந்திரன் நளனைத் தூதனுப்பகின்றான். நான் எப்படி அந்தப்புரத்திற்குள் நுழைவது என்று கேட்க, இந்திரன் உருமறைக்கும் மந்திரததை நளனுக்குச் சொல்கிறான். அம்மந்திரத்தால் தான், நளன் யார் கண்ணிலும் படாமல் போகின்றான். தெளிபட்ட நீர், ஓடத்திலிருந்த மங்கையரின் மறைவிடத்து லெளிப்புறத்து அளித்துவிட்டதாமே, கம்பருடைய

காட்சியிலே, அப்படியானால், தெளிந்த நீரில் மூழ்கி விளையாடும் மங்கையரின் காட்சி எப்படி இருந்திருக்கம்:

இதைக் கண்ட நளன், யானோ யார் கண்ணிலும் படமாட்டேன். எல்லாம் உள்ளது உள்ளபடியே தெரிகிறது, களைப்பு நீங்க, களிப்புப் பொங்க, இதுபோலச் சந்தர்ப்பம் கிடைக்காது, இங்கேயே நின்று பார்ப்போம் என்று பாடினாரா? இல்லை. கண்டான் களிகொண்டான் என்றாவது பாடினார அதிவீரராமபாண்டியன்? இல்லை.

தற்செயலாக இக்காட்சியைக் கண்டுவிட்ட நளன், காணக்கூடாததைக் கண்டுவிட்டேனே, என்று கண்களை மூடினான். சிலரைப் போல் கண்களை மூடித் தவம் இருப்பது போல, களவாகப் பார்க்கிற கள்ளர்களைப் போல் அல்லாமல், இறுக மூடிக்கொண்டான். நளன் நாடாளும் மன்னன், கலைவல்லான், ஆகவே, கலாரசனை காரணமாக, புனலாடும் பூவையரைப் பார்த்துச் களித்தான் என்று கூறாமல், அவனது மனம் பண்பிற்குப் பயந்து, கண்களை இறுக மூடிக்கொண்டான் என்று கூறுகின்றார்.

பாடலைப் பாருங்கல்

மலர்பயில் வாவிதோய் மாதர் நுண்டுகிலலை
புனனனை தலால அல்குல் தோன்றலால்
கலைவலான் கண்முகிழ்ந் தேகக் காண்கிலான்
முலைமுகட முத்தற ஒருத்தி முட்டினாள்.

பொருளைப் பாருங்கள்.

மலர் நிறைந்த வாவியிலே, நீராடுகின்ற மாதர்களுடைய மெல்லிய ஆடைகள் நீரின் நனைந்ததாலே, அவா:களுடைய அல்குல் வெளியே தெரிந்தது. கலாரசிகனான நளன் அதைக் காணவிரும்பாமல், கண்களை மூடிக்கொண்டு செல்ல, தன்னுடைய முலை அவனுடைய மார்பிலே அழுந்தும்படியாக ஒருத்தி மோதினாள். நளன் உருவம் தெரியாமல் வருகின்றான் எதிரில் வருவோரைத் தெரியாமல் கண்ணையும் மூடிக்கொண்டான். அதனால் குளித்துவிட்டு வெளியேறிய பெண், அவன் கண்களில் தெரியாததால் நேராக வந்து மோதிக்கொண்டாள். எவ்வளவு அருமையாக, நாகரீகமாக, இக்காமச் சுவையை அதிவீரராம பாண்டியர் பாடினார்.

இந்த இடம் கம்பனுக்குக் கிடைந்திருந்தால் விடுவானா? வேதனையோடு களைத்துக் கிடந்த மாதரிடமே, எது தாமரை மொட்டு, எது பனிபடர்ந்த மலைமுகடு, என்று பார்த்தவனாயிற்றே கம்பன. இன்னொரு இடத்திலே பாருங்கள் நளனும் தமயந்தியுப் நீராடுகிறார்கள். அவர்கள் கணவனும் மனைவியும்.

அவர்களிடையே ஒளிவு மறைவு கிடையாது. அவர்கள் நீராடுப் காட்சியை அதிவீரராமபாண்டியர் விளக்குகிறார் பாருங்கள்.

அந்துகில் நனைதலால் அல்குல் தோன்றலால்
கந்தடு களிற்றினான் காண வெள்குறாக்
சுந்தரச் சுண்ணநீர் முகத்தில் தூவினாள்.

நீராடும்போது மெல்லாடை நனைந்ததால், தமயந்தியினுடைய அல்குல் தெரிந்தது. மதயானையையுடைய மன்னான நளன் அதைப் பார்த்தான். அதைக்கண்டு வெட்கப்பட்டு, அவள் அவன் பார்வையைத் தடைசெய்யும் பொருட்டு, நீராடக் கொண்டு வந்த வாசனைச் சாயநீரை அவனுடைய முகத்திலே ஊற்றினாள். அரசலிலையைப் பாட வந்த நைடதத்தார் இவ்வளவு கட்டுத் திட்டப் வைத்திருக்கும்போது, தேவலீலையைப் பாடவந்த கம்பன் கட்டு மீறுவது சரியாகுமா?

மிதிலையிலே இராமன் வில்லை முறித்தச் சீதையைப் பெற்றுக் கொண்டான்.. திருமணம் பற்றிச் செய்தி வந்தது. தசரதர் மந்திரி பிரதானிகள, படை பரிவாரங்களுடன் போகிறார். தசரதனுடன் வேறு பல மன்னர்களும் வருகிறார்கள். அவர்களில் ஒரு மன்னன் நீராடுகின்றான் எப்படி?

குடைந்து நீராடும் மாதர்குழாம் புடைசூழ
தடம்புயம் பொலியவாண்டோர்
தார்கெழு வேந்தன் நின்றான்.

(பாலகாண்டம் புனல்விளையுர்ட்டுப் படலம் 12 வது பாடல்) நிரிலே நிச்சலடித்து விளையாடும மாதர் சுற்றி நின்று நீராட, அகன்ற மார்புகள் அழகுகொளிர மாலையணிந்த மன்னன் ஒருவன் நடுவே நின்று நீராடினான். கட்டிய மனைவியன் மறைவிடத்தைக் காணவே நைடத ஆசிரியர் விடவில்லை. கம்பனோ ஒரு கன்னியர் கூட்டத்தோடு, ஒருத்தனை நீர் விளையாட விட்டுள்ளான். அந்த மன்னன் எத்தனை விதமான தோற்றமுடைய மறைவுகளை கண்டு சுவைத்திருப்பான்.. அதுவும் அவதாரமூர்த்தி இராமபிரானுடைய திருமணத்திற்குச் சென்ற, இறைவனுடைய உறவுப்பெண்கள். இந்தச் கடவுட் கதை பக்தியைத் தருமாடா தமிழா! இதைப் பாடினால் பக்தி வருமா? பாவையர் பக்கம் பார்வை போகுமா?

இன்னொரு குளத்தைப் பாருங்கள்.. அழகான குளம். தாமரைகள் மலர்ந்த நிறைந்துள்ளன. அதில் ஒரு அழகிய கன்னி மூழ்கி மூழ்கி நீராடுகின்றாள். ஓரிளைஞன் அக்காட்சியைக் கண்டு மனதைப் பறிகொடுத்தான்.. இந்தக்கட்டம் கம்பனுக்கு ஏற்ற கட்டம். ஆனால் இதைப் பாடியது வெறொருவர்.

தாமரை பூத்த குளத்தினில் முகத்
தாமரை தோன்ற மூழ்கிடுவாள் அந்தச்
கோமளவல்லியைக் கண்டுவிட்டான் அவள்
தூய்மை படைத்த உடம்பினையும் பசுர்
தோகை நிகர்த்த நடையினையும்

அவன் கண்டு காதல் கொண்டு கதை தொடர்கிறது. எவ்வளவு பண்பு பார்த்தீர்களா! இப்பாடலில். அவள் ஆனந்தமாக நீராடுகின்றாள். உடல் எல்லாம் தெரியும். ஆனால் இந்தப் பாவலனின் இளைஞன் கண்டது, அவள் முகத்தைத் தான. அவளோ கோமளவல்லி, அதாவது எல்லா அழுகுகளும் நிறைந்தவள். ஆனால், அவன் முதலில் கண்டது தாமரை முகத்தைத் தான். பிறகு உடலைக் கண்டான்.. ஆனால், அவன் மலைகளையுப் பள்ளத்தாக்குகளையும் பார்க்கவில்லை. கம்பன் பாடுவதுபோல் உடலையும் அவன் காணவில்லை. அதுவும் நீருக்கு வெளியே வந்துவிட்டாள் அப்பவும் அவன் கண்டது, தூய்மையான உடலையும், மயிலொத்த நடையையும் தான. எத்தகைய பண்பு பார்த்தீர்களா? இதைக் கம்பன் பாடியிருந்தால் என்னத்தையெல்லாப் கண்டிருப்பீர்கள். இதைப் பாடிய பாவலன் பாவேந்தர் கனக.சுப்புரத்தினம் ( பாரதிதாசன் )

பாவேந்தர் பாடியது குப்பத்துக் குப்பன் கதையை.
அதிவீரராமபாண்டியன் பாடியது அரசன் கதையை.
கம்பன் பாடியதோ கடவுளின் கதை.

வெறும் பொழுது போக்குப் பாடலா? பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்பதற்கு, வீடுபேறு அடைவதற்கு வழி காட்டும் சமயநூல். அதிலா காமச் சுவை கரைபுரண்டு ஓடவேண்டும்? கூடாதே. இருந்துப் பாடினான் ஏன் தெரியுமா? காமச்சுவையைக் காட்டி, கலை என்ற பெயராலும், தேவலிலை என்று பெயராலும், கிளுகிளுப்பை மூட்டி, மடையனாக்கி அவ்வழி ஆரியத்துள் தமிழனைத் தள்ளவென்றெ பாடினான். ஆரியதாசர்களே! புராண இந்துமதக்காரர்களே உங்களைக் கேட்கின்றேன் இதுதானா? கடவட்கதை?

# வெந்ததே சிந்தை

வாழையிளந் தளதளப்பும் வான்மதியின் ஒளிமுகமும்
வேழத்தெழு செம்மாப்பும் வேட்கத்தகு துணிதகவும்
செந்தமிழ்ச் சிறுசுகளின் சேர்வினிலே நான்கண்டு
சிந்தை மகிழ்ந்துருகச் சிறிதுநான் பார்த்தினபச்
கொந்தளிப்பில் துள்ளி குறுகியக் குழந்தைகளை
வந்துங்கள் வாயாலே வளரும் மழலையிலே
சொல்லுங்கள் குறளென்று கொஞ்சுதமிழால் அழைத்தேன்
வந்தவர்கள் பெயரையவர் வாயாலே கேட்டிடவே
எண்ணித் துணிந்து எதுவுங்கள் பெயரென்றேன்
முல்லைப் பல்தெரிய மெல்லச் சிரிப்பெடுத்து
கள்ளமில்லா உள்ளத்து களிப்பதிலே மிதந்துவர
எல்லையில்லா இன்பத்தை என்மனதிற் குடியேற்றி
சொன்னார்கள் பாதுசா சபீனா ஜொமீல் என்று
இசுலாம் குழந்தைகளும் இனியதமிழ் செலவம்தான்
நன்று நன்று எனமகிழ்ந்து நானவர்கள் தந்தைபெயர்
நசுருதீன் அப்துல்லா நவாப் ஆயிருக்குமென்று
அப்பாபேர் கேட்டேன் அமுதாய் பொழிந்தார்கள்
அண்டம் அதிர்ந்ததோ அணுகுண்டு வீழ்ந்ததோ
அறியேன் கதிகலங்கி ஐம்புலனும் அடங்கியது
பக்கத்திருந்த நண்பர் பார்த்தார் என்நிலையை
ஒக்கப் புலனைந்தும் ஒடுங்கிப் பெருந்தவத்தில்
முக்குளித்துப் போயுள்ளார் மூச்சோ முனகலில்லை
என்றேங்கி என்னண்ணா என்றென்னைத் தட்டவுமே
விண்ணிருந்து மண்வீழ்ந்து வெந்ததடா சிந்தையென்றேன்
சுந்தருக்கும் சுகந்தனுக்கும் சுப்பிரமணி யத்துக்குப்
வந்துதித்த செல்வங்கள் வைத்திருக்கும் பெயரைப் பார்
என்றுநான் எடுத்துரைக்க ஏங்கிச் செயலிழந்தார்

---

ஐயோ தமிழா! அடிமடையா! முட்டாளே!
பிள்ளைக்குப் பெயர்வைக்க பைந்தமிழில் பெயரின்றி
என்னென்று தெரியாமல் எப்படியோ ஸரைல் என்று
கன்னா பின்னாவாய் கருத்தின்றிப் பெயர்வைத்து
இன்னாரென் றெதிர்காலம் அறியாமற் தடுமாறி
மற்றோர் அகதியாய் மாறுவாய் இருந்துபார்
......................நிர்த்தனப்

## வாழும் தமிழும் பாழும் தமிழர்களும்

*தமிழ்த்தாய் என்ன பாவம் செய்து பெற்றாளோ, தன்னையே மாற்றானுக்கு விலைபேசும் தறுதலைப் பிள்ளைகளை.*

ஏறத்தாழ கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை, தமிழ்மொழியில் இலக்கியங்கள் தோன்றவில்லை. காரணம, தமிழுக்குள் வந்து கலந்த வடதிராவிடரான பிற்காலச் சோழர்கள், ஆரிய மதுவிலும், மாதரிலும் மூழ்கிக்கிடந்து, இனநலனை மறந்து, ஆரியத்தை மேம்படுத்தியதால், தமிழர்கள் கல்வி கற்பது தடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, உயர் வட்டாரங்களில் இருந்து ஒதுக்கப்பட்டான். அவனும் அவர்கள் சொன்னதைக் கேட்டுச் சாமியை நம்பி, மாந்த உருவெடுத்த மாக்களாகிப் போனார்கள்: தனிப்பட திண்ணைப் பள்ளிகளில் ஒருசிலர் தமிழைக் கற்று, புலமைப் பரம்பரையைத் தொடர்த்தி வந்தபோதிலும், ஆதரவின்மை காரணமாக, காவியங்களைப் படைக்கும் வல்லமை இல்லாமல் இருந்தது.

ஆரியத்தின் அடிமைத்தனத்தில் பழகிப்போன தமிழன், அதன் பின் வந்த ஐரோப்பயத்தை இலகுவாக ஏற்றுக்கொண்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பியர் தமக்கேற்ப அணியப்படுத்திய கல்வியைக் கற்று, அதனூடாக தமிழையும் கற்றார்கள். தமிழைக் கற்ற பார்ப்பான், பார்ப்பனீயத்திற்காகத் தமிழை, தமிழ் இலக்கியங்களைத் தன் எண்ணத்திற்கு வளைத்தான். தமிழைக் கற்ற தமிழனோவென்றால், தான் கற்ற தமிழைக் கொண்டு தான் வாழ்ந்தால் போதும் என்று, ஆரிய - பார்பனீய -ஐரோப்பியம் சார்ந்த ஆதிக்கங்களின் எண்ணங்களுக்கு ஏற்ப, தமிழுக்கு எதிரான எண்ணங்களை, ஆரியத்திற்குச் சார்பாகச் சொல்லி விபச்சாரம் செய்கின்றான்

தமிழகத்தில் வையாபுரியில் இருந்து இன்று வாழ்கிற சிலதுகள் வரை, ஈழத்தில் ஞானப்பிரகாசரில் இருந்து இன்று வாழ்கிற பேராசிரியர்கள் வரை, தாங்கள் வாழும் காலத்தில் தமிழின் எதிரிகளைத் திருப்திப் படுத்திவிடவேண்டும் என்கிற துடிப்பிலே, தமிழின் வரலாற்றையும், இலக்கியங்களையும் திரித்தும், தமிழின் தூய்மையைக் கெடுத்தும், பாவனையில் இல்லாததும் ஒருகாலத்தில் ஆரியதாசர்களால் தமிழுக்குள் கொண்டுவரப்பட்டு, பின்னர் சீர்திருத்தக்காரர்களால் நீக்கப்பட்டதுமான வடசொற்களை, மீண்டும் பாவனைக்குள் கொண்டுவரவும் முயல்கிறார்கள். ஒருசிலரைத் தவிர அனைத்துக் கல்விமான்களும் இப்படியான

தாய்த் துரோகிகளாக இருப்பது தமிழ்த்தாய் செய்த பாவம் போலும்.

தமிழ் தமிழ் என்று சொல்லிக்கொண்டிருந்த ஒரு தமிழ்ப் பேராசிரியர், உபவேந்தர் பதவி கிடைத்ததும், உலுத்தன் ஆனார்: புருஷன் என்பது ஆணைக் குறிக்கும் வடசொல் இது ஒருகாலத்தில் தமிழுக்குள் நன்கு இடம் பிடித்திருந்தது.. பின் வடவெழுத்தை நீக்கும் முயற்சியில் புருடன் ஆயிற்று. ஆனால், இதற்கான பெண்பாற் சொல் பாவனையில் இல்லை. இந்த நிலையில், ஒருமேடையில் அந்தத் தமிழகத்துப் பேரறிஞர் பேசுகின்றார். வீட்டுக்குள் அடங்கியிருந்த புருஷி, தன் கணவனைக் கள்வன் என்றதும் பொங்கி எழுந்தாளனாம். கண்ணகி என்றோ, தமிழ்ப்பெண் என்றோ, நங்கை, மங்கை என்றோ சொல்லியிருக்கலாம். ஆனால், அந்த மனுசனுக்குத் தேவை இதைக் கேட்கும, தமிழகத்துத் தமிழ்பேசும் ஆரியங்கள் மகிழ வேண்டும் என்பதால் புருஷி என்று பேசினார்

இன்னொருத்தர் அவர் சிங்களத்திற்கும் ஆரியத்திற்குப் ஏற்றமாதிரிக் கூத்தாடுவதால், அவருடைய புலமையை மெச்சி, தமிழக அரசும் பாராட்டு வழங்கியது, சிங்களமும் வழங்கியது.. வழங்குவார்கள் தானே! தமிழுக்குத் துரோகம் இழைப்பவர்களுக்கு.. தமிழின் தொன்மையை, இலக்கியங்களின் தொன்மையை கண்டறிந்து வெளிப்படுத்த நாங்கள் படாதபாடு படுகின்றோம்: இந்தாள் என்னென்றால், சிலப்பதிகாரம் தோன்றி அறுநூறு ஆண்டுகள் என்று கொஞ்சமும் கூச்சப்படாமல் --------த் தனமாய்ச் சொல்லுது. "அரசிரைஞ்சால் குடியரையும்" என்று தமிழர்கள் அரசு நிற்கும் இடங்களில் குடியிருப்பதில்லை. இந்தாள் என்னடா என்றால், தமிழர்களின் பண்பாட்டு மரம் அரசமரம் என்கிறார். எப்பேர்பட்ட அறிவாளிகள். தமிழ் தாழ்ந்து போனதே இப்படிப்பட்ட -------------- ------------ பிறவிகளால் தான்

நான்கு வருடங்களுக்கு முன்னரே க்ரியாவின் தற்காலத்தமிழகராதி பற்றி, கமலம் கனன்றிருந்தது. க்ரியா, டப்பா, ரவுடி இப்படி எல்லாம் ஏராளமான சொற்கள் இடம்பெற்றுள்ளன. இப்படியாகத் தமிழுக்கு எதிராக செயற்படும் இவர்கள், அது வாழும் தமிழ் என்று ஒரு சாக்குச் சொல்லித் தப்பிக்கப் பார்க்கிறார்கள். தமிழ் என்ற தொன்ம மொழியை, உலகின் முதன்மொழியை, பல்லாயிரம் ஆண்டுகளாக அழிக்கமுயன்றாலும் அழியாத தெய்வீக மொழியை, கற்பழிப்பதைப் போல் சிர்குலைத்து, ஆரியமொழிகளின் சொற்களைக் கலந்துவிட்டால, தமிழ் வடமொழியிலிருந்து தோன்றியது என்று காட்டித் தமிழை அழித்துவிடலாம் என்கிற, நாசகாரக் கும்பலின் எண்ணம். முன்னரும் பல நூற்றாண்டுகளுக்கு

முன்பு இந்த முயற்சி நடந்து. வெற்றியும் அடைந்திருந்தது. அகத்தியன் முதல் பாரதி வரை விட்ட வடமொழிக் கரடி, இன்று தோற்றோடிப் போன நிலையில், இந்தத் தமிழ் கற்றதகள் மீண்டுப் அந்தக் காரியத்தைச் செய்வதற்குத் துணை நிற்பதற்கு, வாழுப் தமிழ் என்று சாயம் பூசுகிறார்கள். அந்தக் கலப்பு, தமிழை வாழவைக்கவில்லைக் கற்பழிக்கிறது. கற்பழிப்பிற்குப் பெயர் வாழ்க்கை என்றால், அதை இவர்கள் நியாயப்படுத்துகிறார்கள் என்றால், பாவம் அவர்கள் வந்த வழி போலும்., வழியின் உண்மையைச் சொல்கிறார்கள் என்பதைத தவிர வேறு சொல்வதற்கில்லை.

வயிறுக்கு வாழ்கிறதுகள் தான் இப்படி என்றால், தமிழுக்காக வாழ்கிற, தமிழர்களுடைய துன்பங்களை உலகெங்குப் சொல்லி, தமிழர்களுடைய விடுதலைப் போரை நியாயப்படுத்துகிற, நல்ல மனிதர்களும், தங்கள் அறிவின் எல்லையைக் கடந்து, வாயைத் திறந்து, அறியாததை அறிந்ததாகச் சொல்லி, தம்மை அறியாமல், இனத்திற்கு கேடு சூழ்கிறார்கள்.

அவர் ஒரு நல்ல மனிதர், பேராசிரியர், முனைவர், வணக்கத்திற்குரிய குருவானவர், அண்மையில் செருமனிய அரச அதிகாரிகளுக்கு, தமிழரின் நியாயமான விடுதலைப் போரையும் அரசின் பயங்கரவாதத்தையும், எடுத்துச் சொல்லவும், புலிகள் பயங்கரவாதிகள் அல்ல, விடுதலைப் போராளிகளே என்பதை வலியுறுத்தவும், ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்திலே, மிக அழகாக சாதுரியமாகப் பேசினார. மனநிறைவோடு கேட்டுக் கொண்டிருந்தேன். தமிழரின் தாயகம் பற்றிப் பேச்சு வந்தபோது., என்தலையில் செள் ஒன்று வீழ்ந்தது.

ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழர்கள் ஈழத்தீவில் தன்னாட்சியுடன் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு வடக்குக் கிழக்குச் சொந்தமண். அந்த மண்ணில் அவர்கள் உரிமையுடன் வாழ விரும்புவதில் என்ன குற்றம்? ஈராயிரங்களுக்கு முன்பு தமிழர்கள் தென்னிந்தியாவில் இருந்து தான் ஈழத்தில் குடியேறினார்கள் என்றார்.

ஐயோ! தெய்வமே! என்செய்வேன்? மடையா! முட்டாள்! என்று அவரை ஏசமுடியாதே! நல்லவர், உன்னுடைய ஊழியக்காரன், மக்களின் மதிப்பிற்குரியவர, என்செய்வேன!

ஐயோ தமிழா! நான் என்ன செய்வேன் சொல்! கண்டதும் கற்றுப் பண்டிதர் ஆகாத தவறினால் இப்படிச் சொன்னார்.

ஆதி மனிதன் தோன்றிய குமரிக் கண்டத்தின். அழியாத மீதி இலங்கை. குமரிக்கண்டம் முதல் அழிந்து மீந்தது இரண்டாப்

முறை அழிந்தது. அந்த இரண்டாம் அழிவிற்கு முன், அந்த மண்ணில் இராவணன் என்கிற தமிழன் அரசாண்ட செய்தி, விசயன் என்கிற தறுதலை வருமுன் குவேனி என்கிற தமிழிச்சி ஈழத்தை ஆண்ட செய்தி, காலத்தால் மூத்த, காலமறியாத ஈச்சுரங்கள் ஈழமண்ணில் இருக்கிற செய்தி, எல்லாம் அறிந்திருந்தால், இப்படிப் பேசுவாரா? "கமலம்" நீண்டகாலமாக இது பற்றியெல்லாம் பேசி வருகிறது. அது சிறிய வட்டத்துள் உலவுகிற இதழ, அதனால் அது தெரியவில்லை ', உலக மட்டத்தில் உலாவரும் ஏடுகளில் இத்தகைய உண்மை ஆய்வுகள் வரவிடாமல் முன்னுள்ளதகள் பார்த்துக் கொள்ளுங்கள். அதனால் இவருக்கு உண்மைகள் கிட்டவில்லை. ஆனால், இவர்கள் கற்றுத் தேறி, ஆய்வுகள் செய்து, உண்மைகளைக் கண்டு உலகிற்குச் சொல்லாமல், சாப்பாட்டிற்கு வாழ்கிறதுகள் சொல்வதை ஏற்று, இப்படித் தம்மையறியாமற் தவறு செய்கிறார்களே. பொறுக்கமுடியவில்லை. என்னால் முடிந்ததை உடனே செய்தேன். நெஞ்சில் உதிரம் சொட்ட அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் எழுந்து வெளியேறினேன்.

*தமிழார்வம் மிக்க என் இனிய தமிழன்பர்களே!*

*உங்கள் கையில் மணங்கமழும் கமலம், தமிழையும்தமிழனையும் தூய்மைப்படுத்த, அனைத்துத் தமிழர்களும் மறைக்கப்பட்ட தமிழினத்தின் மாண்பு களை அறிந்து எழுச்சிகொள்ள, பணி செய்வதே இலக்காகக் கொண்டுள்ளது. இந்த நற்பணி சிறக்க தங்கள் நல்லாதரவு வேண்டும். ஆகையால் ஆண்டு அறநிதியாக (சந்தா) 20 டி எம் கொடுத்து உதவுங்கள் கமலத்திற்கு.*

**K. Mathy**
**Heeper Str. 104, 33607 Bielefeld (Germany)**

*தங்கள் ஆதரவுக்கு நன்றி. தமிழால் தமிழுக்குள் தமிழனைத் தேடும் கமலத்தின் நற் பணிக்கு உரமூட்டுங்கள்--- பணிவன்புடன் -அழலாடி-*

## தங்கைக்கம் தம்பிக்கும்.

என் அன்பின் இனிய உடன்பிறப்புகளே இறைவன் அருளால் வாழ்க நன்றே!

வள்ளுவன் சொல்கிறான் வணங்கிய வாயினராதல் வேண்டும என்று. நிங்கள் அறிந்தது கைகூப்பி வணங்குதலைத் தானே! ஆனால், வாயினால் வணங்கவேண்டும் என்கிறானே வள்ளுவன். வாய் எப்படி வணங்கும்.? வெறும் போலிச் கைகூப்பல்லகள் இல்லாமல், உண:மையாகவே மனத்தெழுந்த பணிவன்புடன், பிறரிடம் இனிமையாகப் பேசுவ,தே வாய் வணக்கமாகும்..

இறை வணக்கமும் இதைப் போன்றதே, இறை என்றும் கடவுள் என்றும் நாம் பொதுவாகக் குறிப்பிடும் பொருள் இரண்டும் ஒன்றல்ல. இறை என்பது உயிரினங்களுக்கு வேண்டியதை வேண்டியாங்கு, எந்த உந்தல்களும் இன்றி, தானே தவறாது நியைவேற்றும் சக்தி.

கடவுள் என்பது பக்தன் வேண்டும் வரங்களை, அவனுடைய காணிக்கைகளின் பெறுமானத்திற்கு ஏற்ப, பூசகர் என்னும் தரகருடாகத் தந்தருள்வது. இப்படித்தான், பார்ப்பார் முதல் பண்டாரம் வரை கடவுள் தரகர்கள் காட்டி வருகிறார்கள். இவர்கள் காட்டுவது விருப்பு வெறுப்பற்ற சலமிலனாகிய சங்கரனை அல்ல.

இறைவனையோ கடவுளையோ வணங்குவது எப்படி? குளித்து முழுகி, உண்ணநோன்பிருந்து, திருநீற்று வேடந் தரித்து, இறைநாமமே வாய:நிறையக் கோவிலை மும்முறை வலம்வந்து, உச்சிமேற் கைகுவித்து, அரிகரா என்று, ஆயிரத்தோடு ஒன்றாக ஆலய வாசலில் நின்றா? இல்லவே இல்லை- அப்படித் தான் இன்றுவரை நீங்கள் வணங்கி வருகின்றீர்கள். இந்த வழிபாட்டில் உங்களது மனத்தோடு புலன்கள் இணைந்து இறைவனிடம் இல்லாமல், வேறெங்கோ போய்விடும்.

ஒரு ஞானி இறைவனை வணங்கிக் காட்டுகிறார் பாருங்கள்

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக,
நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டி
பூசனை ஈனார்க்குப் போறறுவிக் காட்டினேனே

உடலே கோவிலாய், உள்ளமே பக்தனாக, அன்பே நெய்யும் பாலுமாய், நிறைய நீராட்டிப் பூசை இறைவனுக்குப் போற்றிச் செய்தேன்.

திருமூலர் சொல்கிறார்.

அன்பம் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்,
அன:பே சிவமாவ தாரும் அறிகிலார்.

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்திருப்பாரே

அன்புதான் சிவன் என்னும் இறைவன் என்று அறிந்த பின், அவ் தானே சிவனாகிவிடுவார்.

இசுலாம் ஏகனநேகனான, எல்லாமாயும் ஒன்றுமாயும், ஒன்றுமேயில்லாததுமான, இறையை வணங்குகிறார்கள்.

கிறீத்தவ வேதத்தின பழைய ஏற்பாட்டில் பத்துச் கட்டளைகளில் ஒன்று. "எவன் என்னை ஐம்பூதங்களால் உருவகித்துப் வணங்குகின்றானோ, அவன் ஏழு தலைமுறைகளுக்குச் சபிக்கப்படுவான்"

வைணவ ஆழ்வார் பூதத்தாழ்வார் பாடுகின்றார்.

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு

இக்காலக் கவிஞர் கவிமணி கூறுகின்றார்

உண்மை அன்பை உடையவரே
உலகை அளந்த பெருமானை,
அண்மையாகக் கண்டிடுவார்,
அல்லார் காணார் காணாரே! -என்று

உள்ளத்தில் உண்மையான அன்பிருந்தால் வேறொன்றும் தேவையின்றி, இறைவன் அவர்கள் முன் தோன்றுவான்.

இவற்றிலிருந்து நாம் அறிவதென்ன தம்பி! தங்கையரே! உயிரினங்களிடத்தில், மனிதனாயினும் சரி, மாடாயிருந்தாலும் சரி, நாம் உள்ளத்தால் நல்லன்பு செலுத்தி, இறைவனிடத்துப் மனத்திலே போலிமை இல்லாமல், வேண்டுதல் செய்தால், உங்களுக்கு இறைவனருள் கிட்டும். கோயில் உண்டியலை நிரப்புவதாலோ, பூசகருக்கு அள்ளிக் கொட்டுவதாலோ, தீச்சட்டி எடுப்பதாலோ உமக்கு அவனருள் கிடைத்துவிடாது. உலகை ஏமாற்றும் கடவள் தரகர்கள் உங்களுக்குக் காட்டிய வழி அது தான். ஆனால், நீங்கள் எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டீர்கள். ஏய்த்துத் தின்று கொழுத்த பிராமணிகளும், வடமொழியை தெய்வ பாசை என்று சொல்லும் சைவாச்சாரியார்களும், தாங்கள் வாழ வகுத்துக் கொண்ட ஏமாற்றுகளை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள்.

தமிழ் என்றோர் இனிய, இறைவன் படைத்த மொழி இருக்க, உனக்கு விளங்காத உலுத்தர்களின் மொழியில், உன்மீது இறைவன் அருளை அப்படியே அள்ளிக் கொட்டுவது போல்,அருமையாக உருகிப் பாடி, நமகா நமகா! என்று சொல்ல, நீ நமக்காக நமக்காக சொல்கிறார் மந்திரம், என்று உள்ளுருகி

நிற்பாய். இந்த ஏமாற்றினால், அங்கே இறைவன் இருந்தாலும் வெளியே போய் விடுவான். வரவே மாட்டான்.

அதுவும் போகட்டும், நீங்கள் கும்பிடும் கடவுள் பற்றியாவது தெரிந்து கொண்டுள்ளீரா? என்றால் அதுவுமில்லை. எவ்வளவு பரிதாபத்திற்குரியவர்கள் நீங்கள் எந்தச் சாமியின் பெயரைச் சொன்னாலும் கும்பிடுகிறீர்கள்.- குரங்கைக் கூட ஆஞ்சநேயர் என்று கும்பிடுகிறீர்கள். பார்த்த இடமெல்லாம் பிள்ளையார். அவரில்லாமல், நாட்காரியம் நல்ல காரியம் செய்யமாட்டீர்கள், திருமணமாகாத முழிவியளத்திற்கு கூடாத அபசகுனி, அவரையே முன்வைத்துச் கல்யாணம் நடக்கும். எப்படி உருப்படும் அந்தக் குடும்பம்.. இந்த நிலையில் நீங்கள் உங்கள் கடவுளைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளவேண்டும், இனியும் ஐயனிடம் ஏமாறக்கூடாது. உண்மை இறைவனைக் காணுங்கள் என்று உங்கள் மீது கொண்ட அன்பினால் கூறுகின்றேன்

குமரிக் கண்டத்தில் உயிரினம் தோன்றி, குரங்காகி, மனிதனாக அந்த உயிர் உருவாகிற்று. இதை உலக ஆய்வாளர்களும், சமயசரித்திரக் குறிப்புகளும், இலக்கியச் குறிப்புகளும் உறுதிசெய்கின:றன. இந்த முதல் மனிதன் சிந்தனையாற்றல் பெற்றபோது, இயற்கையின் ஐம்பூதங்களின் செயற்பாடுகளைக் கண்டு அஞ்சினான். தீ தான் அவனை மிக அச்சுறுத்திய முதற்பூதம். அதனால், தீயை மிக ஆற்றல் வாய்ந்த கடவுளாக எண்ணினான், நாளாக நாளாக தீ தனக்கு மிக வேண்டிய ஒப்பற்ற பொருள் என்று கண்டான்: எனவே, அதைப் போற்றினான். அதனால் தான் தீயாகிய சூரியன், தமிழனின் போற்றுதற்குரிய பொருளாயிற்று. இன்று உலகில் உள்ள அனைத்தினங்களும் தங்களது வணக்கத் தலத்தில் தீயை ஏற்றி வணங்குகிறார்கள்

அடுத்த கட்டமாக மனிதன் குழுக்குழுவாக வாழத்: தொடங்கிய காலத்தில், ஒருவரையொருவர் வெற்றி கொண்ட நிகழ்வுகளைக் கொண்டாடினான் வெற்றியைக் கொற்றம் என்ற சொல்லே குறித்தது முன்னர்.. படைப்பு இரகசியம் தாய்மை - பெண்மையிடம் இருந்ததால், பெண்மை போற்றப்பட வேண்டிய பொருளாகக் கொண்ட தமிழன, தாய்மைக்குச்: சக்தி என்று பெயரிட்டான். அதனால் உயர்ந்தது என்று அவன் கருதிய அனைத்தையும் தாய்மை எனக் கொண்டான். அனைத்திற்குப் தாயமையைப் பொருத்தியது போல், கொற்றத்திற்கும் பொருத்திச் கொற்றவை விழாவாககினான் இவனுடைய வாழ:வில் தோன்றிய முதல் விழா இதுதான். மலையில்(குறிஞ்சியில்) இருந்து கீழே இறங்கி வந்த மனிதன், மலைச்சாரலிலே(முல்லை) அருவிகள்

வீழ்கின்ற இடத்திலே, இளவேனிற் காலத்தில், புல்பூண்டு,செடிகொடி, மரம்மட்டை எல்லாம் பூத்துக் குலுங்கிக் கண்ணைக் கவர, வண்டுகளும் தும்பிகளும், முரன்று இசையெழுப்பி இனிமை சேர்க்க, காற்றிலே மலர்களின் நறுமணம் கலந்து வர, அதில் மனதைப் பறிகொடுத்தான். இளவேனிற் காலம் அந்நாளைய மாந்தனின் உழைப்பொழிந்த நாட்கள். எனவே, அந்த நாட்களை முருகு விழாவெடுத்துக் கொண்டாடினான். முருகு என்றால் அழகு என்பது பொருள். அழகை வனப்பு, எழில், முருகு, என்றெல்லாம் தமிழில் குறிப்பினும், இவை வெவ்வேறு இடங்களின் அழகைச் குறப்பன. முருகு மலர்களின் அழகைக் குறிக்கும் சொல்.( முருகிற் சிறந்த கழுநீர் - கலிங்கத்துப்பரணி) இதிலிருந்து முருக வழிபாடு முருகன் வழிபாடு ஆயிற்று. வழிபாடு என்பது வணங்குதல் அல்ல, போற்றுதல.. அதனால் தான், முருகன் கோவில் உலகப் முழுவதிலும் மலைகளில் உள்ளன.

குமரி மனிதன் மிகவும் நாகரீகப்பட்ட காலத்தில், தனக்கென ஒரு இறையைப் படைத்தான். அந்த இறைவன் அன்பே உருவானவன். சிவம் என்றால் அன்பு. அதனால், அவன் சிவன் ஆனான். உலகில் மிகச் சிறந்தபொருள் அன்புதான். ஐம்புலன்கள் அடங்கி, உயிர் உருகும் அதியுன்னத ஒருமைப்பாடு, காதல் அன்பில் தோன்றியதைக் கண்டான்.- கருத்தொருமித்த காதல் இருவர், அது மனிதனோ, விலங்கோ, எதுவாயினும் அன்புருகிப் புணரும் போது தான், புலனடக்கம் அடைகின்றன. அன்பிலும் காதலன்பு தான் உயர்ந்தது. அந்த அன்பில் தான் படைப்பு என்னும் தெய்வநிலை தோன்றுகிறது.

ஒருஞானி பாடுகிறார்.

சோடிழந்த அன்றிலைப் போல் துயரமானேன்,
காடுகளில் இனம் பிரிந்த கலைகளானேன் - என்று
தன் துணையைப் பிரிதல் தாங்கொணாத் கொடுந்துயரம் என்பது இதன் பொருள். எனவே புணர்ச்சி இன்பத்தில் தோன்றும் அன்பே சிவநிலை, அதனால் ஆண்பெண்பணர்ச்சி உறுப்புகளைப் புணர்ச்சி நிலையில் சிவலிங்கம் ஆக்கினான்.

இறைவனுக்கு உருவமில்லை என்ற உண்மையை உணர்ந்த அன்றைய தமிழன், சிவலிங்கத்தைப் படைத்தான். ஏனெனில், அன்பின் உயர்நிலையைத் தரும் அவ்விரண்டும் மனிதனின் கண் முன்னால் உள்ளவை. இவை தான் தம்பி உன் பரம்பரைக் கடவுள்கள். பகுத்தறிவின், உலகின்ப வாழ்வில், முதலில் தமிழன் படைத்த கடவுள்கள்.

வரலாற்றை எடுத்துப் பார்! பண்டைத் தமிழகத்தில்,

சிவலிங்கத்தைக் இறையாகக் கொண்ட ஈச்சுரங்களைத் தவிர வேறு கோயில்கள் இருந்ததில்லை. சிறிது பின் குன்று தோறாடுப் குமரனுக்கு கோவில்கள் எழுந்தன, கொற்றவைக்கும் எழுந்தன. ஆரிய ஊடுருவல் வரை, வேறு எந்த சமயநெறிகளும் தமிழகத்தில் இருந்ததில்லை

ஆனால், இன்று நீ கும்பிடும் சுப்பிரமணயசுவாமி சரவணபவன் எல்லாம் முருகனாகி விட்ட விந்தை உங்களுக்கத் தெரியாது. இந்த விந்தைகளை மறைத்து உங்களை மடையராக்குவதற்கு என்று, புராணங்களை எழதி இதெல்லாம் திருவிளையாடல் என்று உலாவிட்டுள்ளது பார்ப்பனீயம்.

சிவன் கடுந்தவம் இருந்தார். அவரே கடவுள், பின் எந்தக்கடவுளை மன்றாடித் தவம் இருந்தாரோ தெரியவில்லை. (நான் நினைக்கிறேன் தவத்தின் காரணமாகக் கனநாட்கள் உமையாளோடு உடல் உறவு கொள்ளவில்லைப் போலும்) தவத்தின் கடுமையினால் விந்து வெளியாகிக் கங்கையிற் கலந்தது, கங்கை அதனுடைய வெப்பம் தாங்கமாட்டாமல் அதை வெளியே தள்ளிவிட்டாள். தள்ளிவிடப்பட்ட விந்து சரவணப்பொய்கையில் மலரந்திருந்த தாமரை மலரகளில் துளித்துளியாக ஆறுமலர்களில் தெறித்தது.. உடனே ஆறு மலர்களிலும் ஆறு அழகிய ஆண்குழந்தைகள் தோன்றின. உமையம்மை ஓடிச்சென்று அந்த ஆறையும் வாரி அணைத்தாள். அணைக்கவும் அக்குழந்தைகள் ஒன்றாகி ஆறுமுகன் தோன்றினார்: இதுவொரு திருவிளயாடலாம். இது புராணம். இந்தச் சரவணபவனுக்கும் ஆறுமுகனுக்குப் சுப்பிரமணியனுக்கும். உங்களது முழுகனோடு எந்தத் தொடர்புப் கிடையாது. ஆனால், தங்கச்சி நீ ஆறுமுகனுக்கு கந்தசட்டி விரதப் இருக்கிறாய். பாவம் நீ., ஆறுநாள் பட்டினியில் வயிற்றிலை வாய்வு விழுந்தது தான பலன்.. ஏனென்றால், ஆறுமுகன் இருந்தால் தானே!

இதைவிட, இன்னொரு அருள்மிக்க கடவுளை நீங்கள் வணங்குகிறீர்கள். மகாபாரதத்தில் வருகிற பாண்டவர் என்கிற அண்ணன் தம்பிகள் ஐவர். இவர்கள் ஐந்துபேரும் தனித் தனியாகச் சிலர் ஒன்று அல்லது பல மனைவிகளைக் கொண்டிருந்தார்கள். இருந்தாலும் மனைவியிடம் இருந்து பெறுவதைவிட, ஒரு வித்தியாசமான இன்பத்தை இடைக்கிடை பெறுவதற்காகப் போலும், ஐந்து பேருக்கும் ஒரு பொதுப் பெண்டில் வைத்திருந்தார்கள். சும்மா சொல்லக்கூடாது இந்த ஆரியக்கூட்டம் உடலின்பச்சுவைபற்றி நன்றாக அறிந்தவர்கள் தான். நாங்களெல்லாம் இப்படி வைத்திருக்கேலுமா? இந்தப் பொதுப் பெண்டிலுக்குப் பேயர் திரௌபதி. இவளுக்குக் கோயில் கட்டிக் கும்பிடுகிறீர்களே

வெட்கக்கேடு. இந்தளவிற்குக் பார்ப்பனீயத்திடம் நீங்கள் எமாந்து கிடக்கலாமா? நீங்கள் என் உடன்,பிறப்புகள், நீங்கள் மடையர்களாக இருப்பதா? வேண்டாம், சிந்தியுங்கள்!

தமிழனுடைய கடவுளர்கள் வேறுவேறு ஆட்களோ ஒராட்களே என்பது வேண்டாம். சிவன் தந்தை அம்மை தாய், மகன் முருகன். இது நீண்டகாலத்து உறவுத் தொடர். இதற்குள் பிள்ளையார் என்று ஒருவர் வந்து சேர்ந்தார் அதுவும் முருகன் கனகாலமாய் இருக்கிறான் இடையில் வந்த இவர், முருகனது அண்ணனாம். யார் இந்தப் பிள்ளையார?:

கி.பி. மூன்று முதல் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழக வரலாற்றில் பல்லவர்காலமாகும். இவர்கள் தமிழர்கள் அல்ல என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இருந்தாலும் மிகுந்த தமிழ்ப்பற்றும், தமிழ் மானமும் உடையவர்களாய் வாழ்ந்தார்கள். தமிழகத்தின் சிறப்பக் கலைச்செல்வங்கள் பல அவர்களுடைய காலத்தில் தோன்றியவை. நந்திவர்மன் என்பவன் தமிழுக்காகத் தன் உயிரையே கொடுத்தவன். இந்தப் பல்லவர் ஆட்சிக் காலத்திலே, ஆரிய சாளுக்கிய தேசத்தின் மன்னன் புலிகேசி, தமிழகம் மீது படையெடுத்தான். விண் அழிவுகளைத் தவிர்ப்பதற்காக அன்று ஆட்சியில் இருந்து மகேந்திர பல்லவன், அவனை நட்புச் செலுத்தி வரவேற்று விருந்தளித்தான். அந்த விருந்தில் மன்னரக்கு நிகராக, தமிழகத்தின் ஆடற்கலை வல்ல சிவகாமியும் அமர்ந்தாள், ஒரு நாட்டியமாது எனக்கு நிகராக இருத்தப் படுவதா? அது தமிழர்களின் பண்பாடு, அதைப் பொறுக்க மாட்டாத புலிகேசி, சண்டையிட்டு மகேந்திரனைக் கொன்று சிவகாமியைச் சிறைசெய்து சென்றான்

மகேந்திரனுடைய மகன் மாமல்லன் என்கிற நரசிம்மவர்மன் இளைஞன். சூழ்நிலையால், அரசனாக வேண்டி ஏற்பட்டது. சிறை செய்யப்பட்ட சிவகாமி மாமல்லனது காதலி. அரசைப் பொறுப்பேற்ற மாமல்லன், கிழடுகளை நம்பாமல் தன்னுடன் காஞ்சியில் படித்த பரஞ்சோதி என்கிற இளைஞனைத் தன் தளபதியாகக் கொண்டு, தன் தந்தையைக் கொன்றதற்கும், காதலியைச் சிறை செய்ததற்குப் பழிவாங்கும் பொருட்டு, சாளுக்கியம் மீது படையெடுத்தான் (சாளுக்கியம் இன்றைய புதுடில்லி) நீண்டநாட்கள் கோட்டையை முற்றுகையிட்டுப் போராடியும் வெற்றிபெற முடியவில்லை. அவ்வளவு பலம் வாய்ந்த கோட்டை. ஓரிரவு கோட்டையை உளவறிந்து சுற்றிவருகையில் கோட்டையின் ஒரு வாயிற் கதவில், பானை வயிறும் ஆனைமுகமும் கொண்ட ஒருருவம் பதிக்கப்பட்டிருந்ததைச் கண்டார்கள்.. அது பற்றி பரஞ்சோதி ஒற்றனிடம் கேட்டான். இவர் விக்கினேசுவரர் என்கிற தெய்வம். இவரை வழிபட்டால் எல்லா

விக்கினங்களும் தீரும் என்று கூறினான். பரஞ்சோதி உடனே விக்கினேசுவரா எனக்கு இந்தப் போரில் வெற்றியை ஈட்டித் தந்தால், உன்னை நான் தமிழகத்தில் கடவுள் மங்கலம் (பிரதிஷ்டை) செய்கிறேன் என்று நேர்த்தி வைத்துக் கொண்டு, மறுநாள் போரை நடாத்தினான். இரண்:டொரு நாட்களில் விக்கினேசுவர்ர அருளால் கோட்டை விழுந்தது.

இந்த விக்கினேசுவரர் தமிழனுக்குப: பிறத்தியார். சாளுக்கியருடைய குலதெய்வம்.. அவன் பிள்ளையாரை நம்பிச் கோட்டைக் கதவில் காவல் வைத்திருக்கிறான்: அவர் வாசலில் இருந்தால் தனக்கு விக்கினம் ஒன்றும் வராது என்று. ஆனால், விக்கினேசுவரர் தமிழன் கொடுத்த கையூட்டை (இலஞ்சம) வாங்கிச் கொண்டு தன்னவனுக்குத் துரோகம் செய்துவிட்டார். இப்படிப்பட்ட விக்கினேசுவரரைத் தமிழன் எப்படி நம்புவது.. போகட்டும், போரை வென்றதும், மாமல்லன் தணியாத சினத்தினால், தன்னிலை இழந்து கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டான். ஆணபிறவிகள் குழந்தையானாலும் வெட்டியெறி! கைப்பற்றப்டும் பொருட்கள் கைப்பற்றிய விரனுக்கே சொந்தம். ஊரைக் கொளுத்து! பிடிக்கிற கன்னியரைப் பிடிக்கிறவன் தன் விருப்பப்படி அடிமை செய்யலாப் இன்னும் என்னென்னவோ---வடபுலம் முற்றும் அழிந்தது. எல்லாப் முடிந்ததும, சினந் தணிந்ததும, பரஞ்சோதி வாதாபியைச் சுற்றிட் பாரத்தான். அவனுடைய மனம் சிதறியது. ஐயோ! பழிக்குப் பழி என்று சொல்லொணாக் கொடுமைகள் நடந்துள்ளன. நாடே சுடுகாடாயிற்று. மனமுடைந்து போனான். பதவியைத் துறந்தான். புறப்பட விடை கேட்டான். மன்னன் ̣நூறு யானைகளில் செல்வங்கள், வேண்டிய அளவு கன்னியர்கள் என்று என்னவெல்லாமோ கொடுக்க முன் வந்தான். ஆனால், அந்த மடையன் பரஞ்சோதி ஒன்றுமே வேண்டாம், நான் அந்த விக்கினேசுவரரைக் கொண்டு போகின்றேன் என்று அதைத் தமிழகப் கொண்டு வந்தான்: அதானல தான் இன்றும் தமிழகத்தில் வாதாபி கணபதீம் என்று பாடுகிறார்கள் வாதாபி சாளுக்கிய நாட்டின்தலைநதர். இப்படிக் கி.பி 4 அல்லது 5ம் நூற்றாண்டில் தமிழகம் வந்த கணபதி, முருகனுக்கு அண்ணனானது எப்படி? இந்த வரலாறு தெரிந்தால் தானே.அப்படி ஒரு கேள்வி எழுந்தால், ஆளை மடக்கவேண்டும், அதற்கு, ஒரு புராணம் ஒன்று எழுதி, அதற்கொரு பாசுரமும் பாடித் தந்தான். நீங்கள் இப்பவும், அதற்குள் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதே விளங்காமல் பாடுகிறீர்கள்

புராணம் என்ன சொல்கிறது என்றால், கயமுகாசுரன் என்பவன் தேவலோகத்திலே தேவர்களைக் துன்புறுத்திக

கொண்டிருந்தான் அவனது கொடுமை தாங்கமாட்டாமல் தேவர்கள் சிவனிடம் முறை யிட்டார்கள்: இந்த நேரத்தில் காட்டில் இரண்டு ஆனைகள் புணர்வதை அம்மை ஆசையுடன் பார்த்துச் கொண்டிருந்தார். அம்மையின் நோக்கமும் தீர, சிவன் ஆனைமுகப் கொண்ட கணபதியைப் பெற்று போருக்கு அனுப்பினார். ஆனைமுகப் கொண்ட அசுரனை அடக்க ஆனைமுகக் கடவுள் நன்று என்று எண்ணினார் போலும்.

பாசுரம் என்ன சொல்கிறது தங்கச்சி இருக்கிறாள் என்று எனக்கே வெட்கமாயுள்ளது, என்ன செய்ய? சொல்லத்தானே வேண்டும்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

பிடியதன் உருவுமை கொள - பெண்யானையின் உருவத்தை. உமாதேவியார் கொள்ள. மிகு கரியது வடிகொடு - மற்ற ஆண்யானையின் வடிவத்தை தான் கொண்டு.. தனதடி வழிபடுமவரிடர் - தனது பாதங்களைத் தொழுகின்றவர்களுடைய துன்பங்களை. கடிகணபதிவர அருளினன் - நீக்குகின்ற கணபதி பிறக்க அருள் செய்தான் மிகுகொடை - மிகுந்து அருளை வழங்குகின்ற வடிவினர் பயில் - தவவேடத்தார் உறைகின்ற. வலி வலமுறை இறையே -சக்தியுடைய திருவலமுறை என்கிற தலத்திலே உள்ள இறைவன்

புராணத்தையும் பாட்டையும் வைதததுப் பொதுப் பொருள செய்யில், சிவனும் அம்மையும் உலகவலம வந்த நேரத்தில் ஒரு காட்டிலே யானைகள் புணர்வதை அம்மை கண்டான். கண்டதுப் அம்மைக்கு ஆனைகளைப் போல் புணரவேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. நல்லகாலம் மனிதனுக்கு இந்த ஆசை வருவதில்லை. வந்தால், கண்ட கண்ட இடமெல்லாம் அசிங்கமாயட் போயிருக்கும். அதைச் சிவன் புரிந்துகொண்ட வேளையில், தேவர்கள் கயமுகாசுரனது கொடுமையைச: சொன்னார்கள். அப்ப சிவ்ன பார்த்தார், ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழ்த்திற மாதிரி, உமாதேவியின் ஆசையும் தீரந்த மாதிரி, கயமுகாசுரனை வெல்ல ஆனைமுகனைப் பெற்றதுமாச்சு என்று, அம்மையைட் பெண்யானையாக்கித் தான் ஆண் யானையாகி பிள்.ளையாரைட் பெற்றுவிட்டார். எப்படிப் பார்த்தீர்களா? ஆரியப் புராணத்தின் தெய்வீகத்தை. இதில் வருகிறவன் எங்களது அன்பால் உயர்ந்த சிவன் தான். ஆரியப் புராணப்பார்ப்பார் அவனுக்கு இப்படியான

புராணங்களைப் படைத்து தமிழனை ஏமாற்றிவிட்டான். பரஞ்சோதி தூக்கி வந்த கணபதியை எப்படி எங்கே பிறக்க வைத்தார்கள் பார்த்தீர்களா! ஆரியம் என்றாலே விலங்குப் புணர்ச்சியும், பெருந்திணை என்கிற கந்பழிப்பை நீதி ஏன்கிற சதிகாரக் கூட்டம், இவர்கள் காட்டுகிற இந்தப் பொயக் கடவள் தோற்றங்களில் இனியும் தமிழன் ஏமாறவேண்டாம். உங்களுடைய கடவுள்கள் சிவன்-சக்தி-முருகன். இவர்களுக்குப் புராணம் கிடையாது. புராணங்களை நம்பாதீர்கள்.. இறைவன் வேறுபாடு அற்றவன். பழந்தமிழன் ஒருவனே தேவன் என்று இரண்டு சொல்லில் சொல்லிவிட்டான்.. அத்தேவன் எந்தெந்த உருவிலும் இருந்துவிட்டுட் போகட்டும. எந்தச் சமயத்திலும் இருந்துவிட்டுப் போகட்டும் மூலமான அந்த இறையை நாங்கள் சிவன் என்று கண்டோம். எனவே, சிவனைப் போற்றுவோம் உருவறியாது சிவலிங்கத்தில் உருவகித்த இறையைப் போற்றுவோம். பூசாரிகளும், பிராமணப் பெண்ணிற்குப் பிறந்ததால் சர்மா என்று பெயர் வைத்து ஏமாற்றுகிறவர்களுக்கும் இடமளிக்கவேண்டாம்.

உலகம் முழுவதிலும் மதவாதிகள், ஆண்டவனின் பெயரால் மக்களை அஞ்சவைத்து, மடமைக்குள் ஆழ்த்தி வைத்துள்ளார்கள். எவன் எந்தச் சமயத்தவனாய் இருந்தாலும், அவன் தன் சமயத்தில் கட்டுண்டு கிடந்தாலும், அவனவன் தன்தன் தாய் மொழியில் இறைவனைப் போற்றித் ததிக்கிறான். ஆனால், தம்பி! தங்கையரே ஆரியத்துள் கட்டுண்ட தமிழன் தான், தன் மொழியில் இறைவனைத் துதிக்காமல், காட்டுக் கூச்சல் போன்ற வடமொழியில் துதிக்கிறான். இந்திய மதவியாபாரிகள் தான், அதற்கென்று ஒரு சாதியை உருவாக்கி, அதற்கென்று ஒரு மொழி தயாரித்து தமிழனை மடக்கி வைத்திருக்கிறான்

சங்கராச்சாரியார் மிகு புத்திசாலித்தனமாக அதற்கு விளக்கம் தந்துள்ளார். தான் சமக்கிருதம் வேண்டாம் என்று சொல்வாராம், ஆனால் முனிவர்களும் ரிசிகளும் சமக்கிருதத்தில் அல்லவா மந்திரங்களை எழுதிப் போயுள்ளார்கள் என்கிறார். இது தான் ஏமாற்றுக்காரர்களின் பதில். முனிவர்களும், ரிசிகள் என்று சொல்லப்படுபவர்கள் யார்? அவர்கள் தான் இந்தத் தமிழனத்தை தாழ்த்துவதற்குத் திட்டமிட்டு, சரித்திட்டம் தயாரித்து, சாமி வேலைக்குச் சாதியுண்டாக்கிய ஆரியக்கூட்டம். இன்று முனிவர்களாகி விட்டார்கள்: மலையாளத்திலே கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரை, இந்த முனிவர்களால் வடிவமைக்கப்பட்ட சாஸ்த்திரங்களின் படி, திருமணமான பெண், முதல் மூன்று நாளும்

தொடர்ச்சி பக்---------36

## சாதியும் சனாதனமும்

பண்டைத்தமிழகத்தில் சனாதனமும் சாதியும் இருந்ததில்லை. ஆனால், சமயமும் குலங்களும் இருந்தன. சனாதனம் என்பது சாதிப் பிரிவை அடிப்படையாகக் கொண்ட சமய ஒழுங்கு. குலம் என்பது தொழில் அடிப்படையில் அமைந்த குடியமைப்பு. குலம் சாதியல்ல. ஏனெனில், எந்தக் குலத்தில் பிறந்தாலும் அவையில் எல்லோரும் ஒரே தகைமையுடையராய் மதிக்கப்பட்டார்கள். தமிழ்ச் சங்கத்திலே அரசனும் புலவனாய் இருந்தான். வணிகரும், குயவரும், இடையரும், கரையரும், உழவரும், பறையரும் புலவர்களாக அரசனுடன் சமனாக அமர்ந்தார்கள். வள்ளுவர் பறையர் என்று கூறப்படுகின்றது.

தொழில்வழிப் பிரிவு அன்றைய குமுகாயத்தின், பொருளியல் அமைப்பின் முதுகெலும்பாக அமைந்திருந்தது. ஆரியம் நுழைந்து சாதியமைப்பை தொடங்கிய நாட்களில் அதை எதிர்த்துத் தான் கடைச்சங்கப் புலவனான கணியன் பூங்குன்றன். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றான். ஆரியம் நன்றாக மூடிய பின்னரும், சாதியமைப்பை எதிர்த்துத் திருநாவுக்கருசு நாயனார், ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே என்று பாடுகின்றார்.

தொழில் வழியில் அமைந்திருந்த சிலகுலப்பெயர்களை நாம் கவனிப்பின் அது விளங்கும். பார்ப்பார், வணிகர், வேளாளர், பள்ளர், நழவர்,(நளவர்) பறையர், அம்பட்டர், வண்ணார், இடையர் அல்லது ஆயர், கம்மாளர், குயவர், கரையர், பரதர், உமணர், சிவியர், காழியர், கூழியர் என்றிவ்வாறாகப் பல குலப்பிரிவுகள் இருந்தன.

பார்ப்பார் என்பது சமயச் சடங்குகளைச் செய்து வந்த கூட்டத்தார். இன்றைய ஆரியப் பார்பார் அல்ல. ஆரியம் அரிய அந்தணரான பார்ர்ப்பாரின் இடத்தைக் கவர்ந்து கொண்டதால், பார்ப்பார் என்றால் இன்று பிராமணனைக் குறிக்கிறது. பார்ப்பு என்றால் குஞ்சு என்பது பொருள்.

> அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாய்நெகிழ
> வெள்ளந் தீப்பட்டதென வெரீஇ- புள்ளினந்தம்
> கைச்சிறகால் பார்ப்பொடுக்கும்

சேறு நிறைந்த வயலிலே செந்நிற ஆம்பல் மலர்கள் மலரவும் வெள்ளத்தில் தீ மூண்டுவிட்டதாக அஞ்சி, நீர்வாழ் பறவைகள் தம் கையாகிய சிறகினால் குஞ்சுகளை அணைக்கும். பார்ப்பு என்பது பாதுகாக்கப் படவேண்டிய நிலையில் உள்ள முதிராவுயிர். ஆகவே குமுகாயத்தில் உள்ள மக்களுக்கு நல்வழி காட்டி, அவர்களை அணைத்துப் பாதுகாக்கின்ற அந்தணன் பார்ப்பான் ஆவான்.

அறவழிகளைக் காட்டி, நன்மக்களாய் வாழ்வதற்கு துணையானவன் சான்றோனாகிய பார்ப்பான். அவன் இருந்த உயரிய இடத்தைப் பிடித்துக் கொண்ட பார்ப்பார், தாங்கள் பார்ப்பாராகியே, இன்று பிராமணம் அவ்விடத்தைப் பிடித்துக் கொண்டது.

வணிகர். வணிகம் என்றால் வண்:+இகம். வண் என்பது கொடை இகம் என்பது இவ்வுலகம் (இவ்வுலக வாழ்வு) எனவே, வணிகர் என்றால் இவ்வுலக வாழ்வைக் கொடுப்பவர்கள். அக்கால வாழ்வின் அறங்களில் பகுத்துண்ணலே உயர்நத் அறம். உணவே உயிர்களின் உயர்ந்த பொருளாய் இருந்தது. அத்தகைய உணவை வேண்டியார்க்கு வேண்டிய பொழுதில் வழங்கி மக்களை வாழ வைப்பதால் வணிகர் எனப்பட்டனர். ஒரு ஞானி பாடுவார் " அன்னவிசாரம் அதுவே விசாரம். சோறில்லை என்கிற துன்பம் தான் உலகில் முழுத்துன்பமும் என்று. எனவே உயிர்களின் துன்பங்களை நீக்குபவர்கள் வணிகர். இவர்கள் வியாபாரிகள்

வேளாளர். வேள் என்றால் மண்- மன்னன் என்ற இரண்டையும் குறிக்கும், வேளாளர் மண் மன்னன் இரண:டையுப் ஆள்பவர். உழவுத்தொழில் நாட்டின் பொருளியல் வளமாக இருந்த காலத்தில், மண்ணை தன் விருப்பிற்கேற்ப ஆண்டு, ஆட்சிப்படுத்தி அந்த மண்ணில் தான் விரும்பும் பயிர்களை உற்பத்தி செய்து நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதோடு, மன்னனுக்கு நாடாள்வதற்கு வேண்டிய, பொருள் வளத்தையும் வழங்குகின்றான்.

ஏரால் எண்திசை வளர்க்கும் புகழவேளாளர்
ஏரடிக்குஞ் சிறுகோலால் தரணியாளச்
சீராரும் முடியரசர் இருந்து செங்கோல் செலுத்துவர்.

வேளாளன் மாடுவிரட்டும் சிறதடியால் உலகை ஆள, அரசர்கள் செங்கோல் நடாத்தகின்றனர். என்கிறார் சேக்கிழார்.

பள்ளர். இவர்கள் தான் உண்மையான உழவர்கள் ஆவர். நிலக்கிழாராகிய வேளாளனுடைய நிலத்திலே உழவுத் தொழில் செய்தவர்கள் இவர்கள்.. நெற்கழனிகள் நாட்டின் பள்ள நிலத்தில் இருப்பதால், இவர்களது குடியிருப்பு பள்ள நிலங்களில் (மருதம், வயலும் வயல் சார்ந்த இடமும்) அமைந்திருந்தது: அதனால் பள்ளநிலத்தில் இருந்ததன் காரணப் பெயராக பள்ளர் எனப்பட்டனர்.

பள்ளன் எழுந்த நிலை தரித்தான் - நின்ற
பள்ளியர் முகம்பார்த்துச் சிரித்தான்
மெள்ளப் புருவங்கோட்டி நெரித்தான்- மாட்டை
மீளவும் பூட்டியுழத் தரித்தான்.

முக்கூடற் பள்ளு என்னும் பழந்தமிழ்ப் பாடலொன்று பள்ளர் என்பவர் உழவர்கள் என்பதைக் கூறுகிறது இவர்களது பாடலுக்கே

பள்ளு என்று தான் பெயர்

மள்ளர் என்ற சொல் உழவரைக் குறிக்கும் சொல: பேராசிரியர் குணா அவர்கள் மள்ளர் என்ற சொல்தான், மருவிப் பளள்ர் ஆயிற்று என்கிறார் அள்ளல் என்றாற் சேறு. வயல் சேறு நிறைந்தது. குறுந்தொகை என்னும் சங்கநூற் பாடலொன்று, அள்ளற்பழனம் என்று வயலைக் குறிக்கின்றது. எனவே. அள்ளலில் வேலை செய்தவர்கள் அள்ளர் ஆகவும் இருந்திருக்கலாம். அதுவும் மருவிப் பள்ளர் ஆகியிருக்கலாம்: எப்படிப் பார்த்தாலும் குலப்பெயர்கள் தொழில் காரணமான காரணப் பெயர்களாகவே தோன்றியது தெரிகின்றது. சாதிப் பிரிவால் அல்ல.

நழவர். இவர்கள் படைவீரர்கள். அதுவும் மெய்காப்பாளர்கள். தமது உயிருக்கு ஆபத்து வந்த காலத்தும், அரசனது உயிரைச் காத்து நின்று போரிடுவர். அரசனது மிக நேருங்கிய அன்பிற்குப் நம்பிக்கைக்கும் உரியவர்கள். மிகப் பொறுப்பு வாய்ந்தவர்கள். எந்த இடத்திலும் தன்னுயிருக்கு அஞ்சி நழுவார். இவர்களது அடைமொழிப் பெயர் நழுவார். அது திரிந்து நழவர் ஆயிற்று.

கழகத்தமிழ் அகராதியில் இவர்கள் நளவர் என்று, ளகாரத்தால் மாற்றி அழைக்கப்பட்டிருக்கிறார்கள் அச்சொல்லிற்குட் பொருள் தந்த அகராதி கள்ளிறக்கும் சாதி என்று, தவறாகட் பொருள் தந்திருக்கிறது. அது சரியாயின் தமிழ்நிலங்கள் எல்லாவிடங்களிலும் அச்சாதி இருத்தல் வேண்டும். இலங்கையில் தான் இவர்கள் பெருமளவில் இருக்கிநார்கள். அகராதீயின் ளகாரப்படி பார்த்தாலும், நளவர் = நள் + அவர். நள் என்பது மிக இறுக்கமான நட்பு. கோப்பெருஞ்சிங்கன் இறதந்தைக் கேட்டு, பிசிராந்தையார் உயிர் துறந்ததைப் போன்ற, உயிரளாவிய நட்பு. அவர் என்றால் உரித்துடையவர். உயிரைத்தரும்படியான உயர்ந்த நட்பிற்குரியவர். இன்னொரு வகையால், நள் என்பது நடு. என்னும் இடப்பெயர். அரசவையோ எங்கோ, அரசனோடு நடுநிற்குப் உரித்துடையார். மெய்க்காப்பாளர்கள்.

பறையர். வள்ளுவர் பறையர் என முன்னே பார்த்தோம். அந்நாளில், அரச ஆணைகளும் சிறப்புச் செய்திகளும் நாட்டு மக்களுக்குப் பறையறைந்து புரப்புரை செய்யப்பட்டது. இந்த அறிவிப்பாளர்கள், பறையறைந்து அறிவிப்புச் செய்வதால், பறையர் என்று அடைமொழி பெற்றனர் ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன்புவரை, யாழ்ப்பாணத்தில் நகரசபைகளின் அறிவிப்புகள் பறையறைந்தே சாற்றப்பட்டது.

அம்பட்டர் - அப் +பட்டர். அம் என்றால் அழகு. பட்டர் என்றால் பட்டை தீட்டுகிறவர். பட்டைதீட்டுதல் என்பது, இரத்தினப்

வைரம் போன்ற கற்களை வெட்டி அழகிய மணிகளாக் செய்தலாகும். ஒருவருடைய முகவழகு முடியழகில் தங்கியுள்ளதை அனைவரும் அறிவர். கம்பர் மகன் அம்பிகாபதி அமராவதியின் முகத்தை மேல் மாடியில் கண்டவுடன் பாடிய வரிகள் "சித்திரப் பொற்றேரிருக்கத் தலையலங்காரம் புறப்பட்டதே," தலையலங்காரமே ஒருவரில் அழகை மேம்படுத்தும்- அந்தத் தலையழகைப் பட்டைதீட்டும் கலைஞர் அம்பட்டர். எவ்வளவு அருமையான தமிழ்ச்சொல்

வண்ணார். வண்ணங்களை ஆள்பவர் வண்ணார் ஆனார். ஒரு கிராமியப் பழமொழி "புதுமைக்கு வண்ணான் கரைகட்டி வெளுப்பான" புதிதாக ஒருவருக்குத் தொழில் செய்ய வருகின்ற வண்ணார் ஒருவர், ஆடயின் கரையில் இருக்கின்ற சாயங்கள் போகாதபடி கவனமாகக் கரையைக் கட்டி தோய்ப்பார். ஏனென்றால், சேலைக் கரையின் சாயமழிந்தால், வீட்டார் வேறாளைப் பார்ப்பார்கள் என்று. எனவே, வண்ணங்கள் அழியாது வண்ணமாய் வெளுக்கும் கலைஞன் வண்ணான்.

இடையர் அல்லது ஆயர். குறிஞ்சிக்கும் மருதத்துக்குப் இடைப்பட்டது முல்லை நிலம். முல்லை நிலமே மந்தை மேய்ப்பிற்குரியதாய: இருந்தது. மருதநிலத்தில் நெற்கழனிகள் காரணமாகப், பயிர்ப் பாதுகாப்புக் கருதியும, மேய்ச்சற் தரைகள் இன்மையாலும், மருதநில மக்களுடைய மந்தைகளைக் கொண்டு சென்று முல்லை நிலத்தில் மேய்க்கின்ற தொழிலைச் செய்தவர்களும், சொந்தமாகவே மந்தைகளை வளர்த்துப் பாலுணவுப் பொருட்களை உற்பத்தி செய,தவர்களும் இடையர். இடைநிலத்தில் இருந்ததால் இடையர் என்றும், ஆ என்றால் பசு அயர் என்றால் புரிதல். ஆயர் என்றால் ஆவின் தொழில் புரிவோர். பசு நாட்டின் போற்றுதற்குரிய செல்வமாக இருந்தது. ஆ மேய்க்குப் தொழில் செய்ததால் ஆயர் என்றும் அழைக்கப்பட்டனர்.

கம்மாளர் என்றால் அறிவர், புலவர், என்று பொருள் தருகிறது அகராதி. கம்மம் என்றால் சிற்பம். சிற்பம் என்பது நுணுக்கமாக, நுண்ணிய வேலைப்பாடுகளால் ஒரு உருவத்தை ஆக்குவது, செய்வதாகும் தச்சர், தட்டார், கொல்லர், கொத்தர் நெயவாளன் ஆகியோர் இதனுள் அடங்குகின்றனர். இவர்கள் செய்கின்ற தொழில் கற்றுத் தேறிய நிறைந்த தொழிலடிப:படை அறிவுடையோரால் மட்டுமே இயலும். ஓவியம், சிற்பம், கணிதப் ஆகிய உயர்கலைகள் கற்றுத் தேறினாலே சிறந்த கம்மாளராக முடியும். முன்னர் நாங்கள் கண்ட தொழில்கள் எல்லாம பட்டறிவினால் இயலும். கம்மாளத் தொழில் கற்காமல் முடியாது.

கொல்லி என்பது தீ. தீயிலே உருக்கி மாழைகளைப் (உலோகம்) பொருட்களாக மாற்றும் கலைஞன். கொல்லன்-பொற்கொல்லன். முன்னாளில் பாறைகளினால் தான் கட்டிடவேலைகள் நடந்தன. பாறைகளைக் கொத்தி பட்டை தீட்டி கட்டியதால் கொத்தர் ஆயினார்

குயவர் மட்பாண்டம் செய்பவர். குயம் என்றால் மறைபொருள் என்பது பொருள். மறைந்துள்ள பகுதிக்குள் கைச் குறிப்பாலேயே வனைந்து பானை போன்ற பண்டங்களைச் செய்வதால் குயவர் ஆயினர்

கரையர் இவர்கள் கடலோடுதலும், மீன்பிடித்தொழிலைப் செய்பவர்களாதலால் நெய்தலில் கடற்கரையோரமாகவே வாழ்கின்றனர். அதனால் கரையர் ஆயினர். இந்நாளில் பாரிய இயந்திர இழுவைப் படகுகளில், மீன் பிடிக்க ஆழகடல் சென்றனர். முன்னாளில் ஆழ்கடல் மீன்பிடியை விட, கரைக்கடல் மீன்பிடியே பெருந்தொழிலாக இருந்தது. ஆழகடலில் இருந்த மீன்கள் கிளைகிளையாகத் திரண்டு வரும். அப்போது கடலில் வரம்பு போன்று ஒரு தோற்றம் தோன்றும். அதைச் செவலை என்று சொல்வார்கள்.. இந்தச் செவலையைக் காத்திருப்பதற்காக கடலின் கரையிலேயே வாடி அமைத்து வாழ்வார்கள். இதனால் கரையர் என்றாயிற்று.

இப்படியாக எல்லா மக்களும் குமுகாயத்தில் ஒரே தரமுடையராய், ஏற்றத் தாழ்வின்றி, தொழில் வழிக் குலங்களாக வாழ்ந்தனர். ஏற்றத்தாழ்வின்மை காரணமாக எந்தத் தொழிலும் இழிந்ததாக எண்ணப்படவில்லை. அதனால், எல்லோரும் மகிழ்ச்சியோடு தன்தன் குலவழக்கத்தைப் பின்பற்றி வாழ்ந்தார்கள்.

கடைச்சங்க காலத்தை அண்டி, மற்றவன் உழைப்பைச் சுரண்டி வாழ்வதிலும், அடங்காக் காமங்கொண்ட தங்களது உடற்றினுவைத் தீர்த்துக் கொள்வதற்கும் ஏற்ற வகையில், ஆரியப் தமிழர் குமுகாயத்துள் ஊடறுக்கத் தொடங்கியது. இதை இனங்கண்ட சங்கப் புலவர்கள் எச்சனிக்கை விடுத்துள்ளதை காணக்கூடியதாகவுள்ளது

சாதியிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
மேதினியில் இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்

-------அவ்வை

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால் ---வள்ளுவர்

இருந்தும் வந்தோரை வரவேற்கும் உயர் விருந்தோம்பலும்.

தொடர்ச்சி பக்----38

30 ம் பக்கத் தொடர் தங்கைக்கும்.......

அவ்வூரின் பிராமணனுக்கு கட்டிற் சுகம் கொடுத்து ஆசிபெற்ற பின் தான், நான்காம் நாள் கணவனுடன் வாழப்போகலாம். எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? பார்ப்பனீயத்தின் திறன். ஊரின் கன்னிப் பெண்கள் அனைவரையும் பிராமணன் உருசி பார்த்தபின் தான் கணவன் துய்க்கலாம்: இந்தக் கூட்டத்திற்கு முண்டு கொடுக்கும் மடங்கள், எப்படிச் சமக்கிருத்தை விடமுடியும்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தங்குளம் பன்னிரு திருமுறைகளும் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் தமிழில் தான் பாடப்பட்டன. அதெல்லாம் மடங்களின் கண்களுக்குத் தெரியவில்லைப் போலும்: நாயன்மார்கள் செய்த அருந்தொண்டுகள் தமிழில் தான் நடைபெற்றன. அப்போதெல்லாம் இறைவன் எப்படித் தான் வடமொழி மந்திரம் இல்லாமல் அநுக்கிரகித்தானோ யாரறிவார:

ஆனபடியால், உடன்பிறப்புகளே, இறைவனை நம்புங்கள், இறைவனிடம் உருகுங்கள், இறைவனிடம் உங்கள் கவலைகளை மனதாலே முறையிடுங்கள், அன்பால் அவனை அணையுங்கள் இறையருள் கிட்டும் ஏமாற்றும் பூசாரிகளிடம:, நீங்கள் பாடுபட்டுழைத்த பணத்தைக் கொட்டி ஏமாறாதீர்கள்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்நெறிக் குய்ப்பது
நாதன் நாமம் நமச்சிவாயவே!

சிவமயம

## 5ம் 6ம் கமலம் இதழ்களின் பின் அட்டைப்படத்திற்கு பாவலன் கமலி அவர்கள் எழுதிய பாடல்



*அன்ன்மே அணிநடையாய் அழகுதமிழ்ப் புலவன்நா*
*சொன்னசொற் பாநடையாய் சொல்லாயே செந்தமிழால்*
*என்னுள்ளம் புகுந்தின்று ஏதிலார் இடைநின்று*
*அன்னைமண் மீட்பதற்காய் ஆர்த்தெழுந்த காதலன்பேர்*

36 ம் பக்---தொடர்சாதியும்......
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத பண்பாட்டினாலும், பிறரைத் தன்னைப் போல் நேசித்த அன்பினாலும், தமிழன் ஏமாந்து போனான். அவன் சொன்னதை நம்பினான். தொழிளாழியாகப் பிறந்தவன் எல்லாம் சூத்திரன் தாழ்ந்தவன். முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களால் தான் சாதி தீர்மானிக்கப்படுகிறது. சூத்திரன் பிரமாவின் பாதங்களில் தோன்றியவன். உழைக்கப் பிறந்தவன். அது தான் அவனது விதி என்று தமிழனை நம்பவைத்தான். நாட்பட நாட்பட தமிழன் கல்வியே கற்கக்கூடாது, கற்றால் பாவப் கிடைக்கும் என்று நம்ப வைத்தான். இந்தளவிலும் அடங்குவானா தமிழன் என்று ஐயம் கொண்ட ஆரியம். சூத்திரனுக்குள் சூத்திரப் விட்டது. நீ வேளாளன் சூத்திரருள் உயர்ந்தவன், அம்பட்டன் வண்ணான் உனக்குக் கிழ்பட்ட சாதி. பளளர் நழவர் அதற்குப் கிழ்ப்பட்டவன், பறையர் தீண்டவே தகாதவர்கள் உருக்கு வெளியே குடியிரு. கிணற்றில் அவனைத் தண்ணீர் அள்ள விடாதே! தீட்டு. என்று உள்ளுக்குள்ளேயே பிரித்துவிட்டான். தங்களுக்குள் உயர்வு தாழ்வு வந்தவுடன் நான் உயர்ந்தவன் என்றெண்ணியவன, தாழ்வுள்ளும் ஒரு உயர்வு என்ற மகிழ்வோடு, சாதிச் சதியை ஏற்றுக்கொண்டான்.

ஆரிய, வடமொழி, வேத இந்துமதம் மூடிய இந்தியாவைத் தவிர எந்த இனத்திலும் சாதிப் பிரிவு இல்லை. இதை இன்னுப் தமிழன் புரிந்து கொண்டதாக இல்லை. கற்றவன் கல்லாமதவன் என்ற வேறுபாடின்றி சமயத்துறையில் மடையர்களாக இருக்கிறார்கள்.

இந்துமதம் என்ற மதமே உலகத்தில் கிடையாது. ஆங்கிலேயன், இந்தியச் சமயங்களில் வேறுபாடு காணமுடியாமல், இந்திய மதங்கள் இந்து மதம் என்று சொன்னதை, பெரும் வாய்ப்பாக ஆரியம் பிடித்துக் கொண்டு பின், வடமொழிக்கேற்ப ஹிந்துசமயம் என்று மாற்றிக் கொண்டான். தமிழனுடைய சமயப் சைவசமயம். அவன: தன்னை இந்து என்று சொல்லக்கூடாது. இந்து என்று இல்லாத சமயத்தைசப் பின்பற்றி, அதன்வழி வந்த இல்லாத சாதியமைப்பை இருக்ச் செய்கின்றான தமிழன்.

மக்களைப் பிரித்து வைப்பதற்காகப் பிராமணீயப் ஏற்படுத்திய சாதி என்னும் தடைச்சுவரை உடைத்தெறிந்தாலே, தமிழினம் உருப்படும். இந்த நல்லெண்ணம் - விழிப்புணர்வு உள்ள அனைவரும் ஒன்றுபட்டு, சமக்கிருதம் என்னும் வடமொழிப் பூசைமுறையையும, சாமி வேலைக்கு என்று இருக்கிற பிராமணச் சாதியின் சதியையும் உடைக்கவேண்டும். அதற்கு ஒரேவழி

தமிழ்மக்கள் எல்லோரும், பிராமணனோ, சைவ அந்தணனோ யாரானாலும், வடமொழியில் பூசை பண்ணாதே தமிழில் பூசை செய் என்று ஒரே குரலில் குரல்கொடுக்கவெண்டும். சமக்கிருதப் தெய்வபாசை என்று ஏமாற்றுகிறவனை இனியும் தமிழன் நம்பக்கூடாது.

சாதிமுறை தகர்த்தெறியப்படவேண்டும் அதற்கு ஒரே வழி தமிழன் தமிழச் சைவத்தைத் தமிழில் வணங்குவதுதான். எண்ணி எழுக!

***மேலதிகத் தொடர்புகளுக்கு***
***கமலம் - பதிப்பாரியர்***

*K.Mathy*
*Heeper str 104*
*33607 Bielefeld*
*Germany*

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழீழம் எங்கள் வாழ்வுக்கு வேர்

அன்புத் தமிழீழ மக்களே! உலகத் தமிழினமே!

- தாம்வதழத் தமிழழிக்கும் தமிழ் விரோதிகளை
- ஆரியத்தின் அடிதடவும் அடிமைத் தமிழர்களை
- தீந்தமிழிருக்கப் பிறமொழிக்குப் புகழ்பாடும் தறுதலைத் தமிழர்களை
- தமிழர் பண்பாட்டைத் தாழ்த்தி நிற்கும், ஆரிய ஆபாசக் காவியங்களைப் போற்றிப்பாடும் தமிழ்ப் பேதைகளை
- எழுந்தமானத்தில் எழுதுகின்ற நானும் எழுத்தாளன் என்கிற தமிழ்ப்போலிகளை

தமிழதல் அடித்துத் திருத்தித் தமிழுக்குடஹ கொண்டுவர கனலில் மலர்வத கமலம்.

கமலம் ஒரு பொழுதுபோக்கு இதழல்ல —
தமிழாய்வு செய்யும் முத்திங்களேடு —
கமலத்தின் எண்ணரத்தடிப்படையில் சீர்திருத்தச்
கருத்துடையோரின் கருத்துக்கள் வரவேற்கப்படும்.

தொடர்புகளுக்கு
Kamalam, Sachsen str 9, 48429 Rheine - Germany.

**என் காதலி**

**மெல்லச்சிரித்தாள் மலர் முருகினிலே ~ என்**
**மேனிதொட்டாள் இளந்தென்றலினால்.**
**துள்ளிக்குதித்தாள வீழ் அருவியிலே ~ என்**
**தோளணைந்தாள் இன்பப் பெருக்கினிலே.**
**புணர்ச்சிதந்தாள் இன்பப் பாவினிலே ~ இதழ்**
**பருகத்தந்தாள் நறுங் கனியினிலே.**
**வீரந்தந்தாள் சொல் வீச்சினிலே ~ அவள்**
**வெற்றிதந்தாள் எழுது கோலினிலே.**
**காதலித்தாள் என் கனித்தமிழால் ~அவள்**
**கன்னித்தமிழ் என்னும் பேரெழிலாள்**